அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை

ATC
AUSTRALIAN TAMIL CONGRESS




பங்குனி 2010
ISSN 1837-6460
மலர் 2 இதழ் 3

# சோழியன் குடுமி...

நன்றி உதயன் ஆசிரியர் குழு

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து தாம் கடந்த வருடம் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரி விக்கப்பட்டிருந்த விடயங்களில் முன்னேற்றம் ஏற்படா தமை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் கவலை வெளியிட்டிருக்கின்றார்.

அவரது இந்த அறிவிப்பு கொழும்புக்கும் ஐ.நா.செயலா ளர் நாயகத்துக்கும் இடையில் முறுகலும், உரசலும் தீவிர மடையத் தொடங்கியுள்ளன என்பதையே கோடிகாட்டு கின்றது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத் தில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் மனித உரிமை மீறல்கள், சர்வதேச யுத்தக் குற்றங்கள் போன்றவை குறித்து விசாரணை நடத்தப்படுவதற்கும் அவற்றுக்குப் பொறுப்புக்கூறவேண்டிய கடப்பாட்டை நிறைவேற்றுவதற்கும் தவறிழைத்தோரை உரிய முறையில் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்பது தான் இந்த முறுகல் நிலைக்கு உரசல் போக்குக்கு பிர தான மூலகாரணம். அது வெளிப்படையாகப் பேசப்படா விட்டாலும் இந்தப் பிணக்கின் பின்புலம் அதுதான் என்பது எல்லோருக்கும் தெரிந்த அம்சம்தான்.

இத்தகைய யுத்த காலச் சம்பவங்கள் குறித்து உரிய நட வடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று இப்போது ஆலாய்ப் பறந்து, மெழுகாய் உருகும் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு, இந்தத் தீவிர நிலைப்பாடு இப்படித் திடீரென வந்திருப்பது அப்படி ஒன்றும் ஆச்சரியப் படத்தக்க விடயமன்று.

"சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பார்கள். அது போல இலங்கை விவகாரத்தில் ஐ.நா. செயலாளர் நாயகத் தின் இத்தகைய திடீர் ஆவேசப் போக்குக்கும் காரணம் இல் லாமல் இல்லை.

இலங்கையில் யுத்தம் மிகத் தீவிரமடைந்திருந்த காலகட்டத்தில் கடந்த ஆண்டின் முற்பகுதியில் இப்படி யெல்லாம் அராஜகம் அரங்கேறுகின்றது, அட்டூழியம் நடக் கின்றது, படுகொலை அத்துமீறல் கணக்கு வழக்கின்றி இடம்பெறுகின்றது என்றெல்லாம் சுட்டிக்காட்டப்பட்டே வந்தது. இலங்கையில் இருந்த ஐ.நா.அலுவலகமும், அதன் பேச்சாளரும் கூட இவற்றை உரிய முறையில் ஐ.நா. தலை மைச் செயலகத்துக்குத் தெரியப்படுத்தத் தவறவில்லை என்பது மறைக்கப்பட்ட விவகாரம் அல்ல.

அந்தச் சமயத்திலும் அதன் தொடர்ச்சியாக வந்த காலகட்டத்திலும் விரைந்து காத்திரமான பதில் நடவடிக் கைகளை ஐ.நா.செயலாளர் நாயகம் எடுப்பார் என இலங் கைத் தமிழர்களும், புலம் பெயர் தமிழர்களும், சர்வதேச உலகத்தவர்களும் எதிர்பார்த்தனர்.

செயற்படவில்லை.

சரி. இப்போதாவது பழையவற்றைக் கிளறி எடுத்துக் கொண்டு நியாயம் கற்பிக்க முயல்பவராக அவர் உருமாற் றம் கொண்டிருக்கின்றார் என்பது வரவேற்கத்தக்கதே. ஆனாலும் அதற்கும் கூட அவரின் உள்நோக்கமும் சுயநல மும்தான் காரணம் என்பது விசனத்துக்குரிய உண்மையாகும்.

2007 ஜனவரியில் ஐ.நா. செயலாளர் நாயகம் பதவிக்கு வந்த பான் கீ மூனின் இந்தப் பதவிக்காலம் அடுத்த ஆண்டு டிசம்பரில் முடிவடைகிறது. அடுத்த பதவிக்கு ஆள் தேடும் படலம் இந்த ஆண்டு நடுப்பகுதியில் ஆரம்பமா கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்ச்சி 13 ம் பக்கம்

# ஆசிரியர் தலையங்கம்

**ஒரு வருடத்திற்கு முன்...**

இன்னும் ஒரு சில நாட்களில் 2010 பங்குனியும் முடிந்து வைகாசி ஆரம்பித்துவிடும். கண்மூடி விழிக்குமுன் ஒருவருடம் காற்றோடு கலந்துவிட்டது. சரியாக ஒரு வருடத்தின் முன் தமிழ் இளையோரின் கூட்டமைப்பின் முதல் கூட்டம் மேற்கு அவுஸ்திரேலியாவில் இடம்பெற்றது. ஒவ்வொருவரும் தன்னாதைச் செய்ய துடித்துக்கொண்டிருந்தார்கள். எவரும் எதிர் பாராத வகையில், 60 வருடங்களாக தொடர்ந்த எமது போராட்டம் திடீரென உருக்குலைந்து விழுந்துவிட்டது. எமது எதிரி ஆயுத படை பலத்தை பெருக்கி எம் மக்களை பூண்டோடு அழித்துவிட்டான். இரண்டு மாதங்களில் எமது பாசத்திற்குரிய மக்களும் நாம் நம்பியிருந்த வீரர்களும் மண்ணோடு மண்ணான செய்தி கேட்டு கலங்கி நின்றோம்.

ஒவ்வொருவரும் பதட்டத்தோடு எமது பிரச்சனைக்கான தீர்வை உடனடியாக எதிர்பார்த்தார்கள். அன்றிருந்த 'ஒவ்வொருவர்' உம், 'நாம்' உம் ஒரு வருடத்திலேயே காணாமல் போய்விட்டார்கள். எங்கள் எல்லோரிடமும் இருந்த மனக்கிளர்ச்சிகள் சிறிது சிறிதாக மங்கிப் போய்விட்டன. அதையிட்டு நாம் வருத்தப்படுவதில் ஒரு பயனும் இல்லை ஏனெனில் அது வெறும் மனக்கிளர்ச்சிகள் மட்டும்தான். இந்த 60 வருடங்களாக தொடர்ந்த போராட்டம், துன்பம், அவமானம் என்பவற்றால் நாம் அறிந்து கொண்டதென்ன? **கடமை.**

எமது தாயகத்திற்காக போராட வேண்டியது எமது கடமை. நீதிக்காகவும், தொடர்ந்தும் துன்ப வேதனையில் மூழ்கியுள்ள எமது தமிழினத்திற்காகவும் , போராடவேண்டியது எமது தலையாய கடமை.

கடமை என்பது அடிக்கடி தோன்றி மறையும் உணர்ச்சியல்ல. அது ஒரு பொறுப்புணர்வு.

எமது மண்ணில் வாழும் மக்களிற்காக போராடுவது எமது பொறுப்பு. அதுவே எமக்காக உயிர் நீர்த்தவர்களுக்கு நாம் கொடுக்கும் மரியாதை. பல உயிர்கள் பலியான போது தப்பிப்பிழைத்துள்ள நீங்களும் நானும் ஒன்று சேர்ந்து அநீதிக்கெதிராகவும் சமத்துவத்தை வேண்டியும் போராட வேண்டும்.

நெருங்கிவரும் இந்த நினைவு நாளில், கடைசிச் சண்டையில் உயிர் நீத்த எமது மக்களிற்கு மரியாதை செலுத்துதி தமிழர்களாகிய நாம் எமது கடமையை தொடர்வோம் என உறுதி பூண வேண்டும். ஆம் அது ஒரு சண்டை தான் அன்றி எமது போராட்டத்தின் முடிவு அல்ல. அடிக்கடி தோன்றி மறையும் உணர்ச்சிகளால் நாம் மனம் தளராமல் நம் கடமையில் உறுதியாக நின்று இன்னும் பல சண்டைகளிற்கு எம்மை தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.♦

# குவீன்ஸ்லாந்து மாநில அவை அறிக்கை

**புலம் பெயர்ந்து தஞ்சமடைந்த தமிழர்களுக்கு உதவி**

கடந்த சில நாட்களாக குவின்ஸ்லாந்தில் குடியேற்றப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவர்களுடைய மிக முக்கியமான தேவை அவரவர்க்கு ஏற்ற வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதாகும். இதற்கு குவின்ஸ்லாந்து அவுஸ்திரேலிய தமிழர் பேரவை அங்கத்தவர்கள் தங்களாலான உதவிகளை வழங்கி வருகின்றார்கள். அத்துடன் புதிதாக வந்தவர்களுக்கு வேண்டிய கணனி, புத்தகங்கள் என்பவற்றை கொடுத்துதவுதல், வழிபாட்டுத் தலங்களுக்கு அழைத்துச்செல்லுதல், தமிழ்த் திரையரங்குகளிற்கு அழைத்துச் செல்லுதல் போன்ற உதவிகளையும் எமது அங்கத்தவர்கள் புரிந்து வருகிறார்கள்.

புதிதாகத் தொடங்கப்பட்ட "சமூகச் சந்திப்பு" என்கின்ற வேலைத்திட்டதத்தின் மூலம்புதிதாக குடியேறியவர்கள் இங்கு ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்களை சந்திக்கும் வாய்ப்பு வளங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிதாக குடியேறியவர்களுக்கு உதவி புரிய விரும்பியவர்கள் தயவு செய்து 1300 660 629 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.

எமது அங்கத்தவர்கள் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீள்வாக்கெடுப்பிற்கு தேவையான உதவிகளையும் புரிந்து வருகின்றார்கள்.

**பிரச்சாரச் செயற்பாடுகள்**

எமது மாநிலத்தின் அரசியல் பிரச்சாரஒருங்கிணைப்பாளரும் சில அங்கத்தவர்களும் 15 பங்குனி 2010 அன்று அனைத்துலக மன்னிப்புச் சபையினரின் குவின்ஸ்லாந்து கிளையின் அங்கத்தவர்களை சந்தித்து உரையாடினார்கள். இந்தச் சந்திப்பில் கிறிஸ்துமஸ் தீவில் இருந்து வருகை தந்திருந்த இருவரும், கடந்த வருடம் இலங்கை அரசினால் நடாத்தப்பட்ட படுகொலையின் சிலவற்றை நேரடியாக பார்த்த இருவரும் கலந்து கொண்டார்கள். இந்த உரையாடலின் போது இலங்கை அரசு நடாத்திய மனித உரிமை மீறல்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

இது மட்டுமல்லாது எமது அரசியற் குழு அவுஸ்திராலியாவின் முந்தய அரசின் "செனற்றர்" அன்ட்று பிரவுண் அவர்களையும் சந்தித்து பேசியது. இதில் சில ஆலோசனைகளை வளங்கிய அன்ட்று பிரவுண், அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே இலங்கை வாழ் தமிழர்களின் உண்மை நிலையின் புரிதுணர்வை ஏற்படுத்த நாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்தினார்.

**உலகத் தமிழர் பேரவை**

கடந்த மாசி மாதம் 24ஆம் நாள் உலகத் தமிழர் பேரவையின் உத்தியோக பூர்வ தொடக்க நிகழ்வு பிரித்தானியாவின் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் எமது மாநில அங்கத்தவர் ஒருவரும் கலந்து கொண்டார். இந்நிகழ்வு மாசி மாதம் 26ம் திகதி நிரைவேறியது. இது பற்றிய ஒரு அறிக்கை குவீன்ஸ்லாந்தின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**சேவை பாராட்டு**

அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் குவீன்ஸ்லாது மாநில நடவடிக்கைகளிலும், நாடளாவிய நடவடிகைகளிலும் (முக்கியமாக தமிழ் செய்திச் சுற்றறிக்கையின் ஆசிரியராக) அயராது பாடுபட்டு உழைத்த அப்பையா இரவீந்திரனின் சேவையை எமது கிழை பாராட்டுகின்றது. இவர் தனது சேவையிலிருந்து தற்காலிக ஓய்வு எடுக்கின்றார். இவரது ஓய்வு நல்லதாக அமைய எமது ஆசிகள். ♦

# குவீன்ஸ்லாந்து மாநில அவை அறிக்கை

**புலம் பெயர்ந்து தஞ்சமடைந்த தமிழர்களுகு உதவி**

கடந்த சில நாட்களாக குவின்ஸ்லாந்தில் குடியேற்றப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவர்களுடைய மிக முக்கியமான தேவை அவரவர்க்கு ஏற்ற வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதாகும். இதற்கு குவின்ஸ்லாந்து அவுஸ்திரேலிய தமிழர் பேரவை அங்கத்தவர்கள் தங்களாலான உதவிகளை வழங்கி வருகின்றார்கள். அத்துடன் புதிதாக வந்தவர்களுக்கு வேண்டிய கணனி, புத்தகங்கள் என்பவற்றை கொடுத்துதவுதல், வழிபாட்டுத் தலங்களுக்கு அழைத்துச்செல்லுதல், தமிழ்த் திரையரங்குகளிற்கு அழைத்துச் செல்லுதல் போன்ற உதவிகளையும் எமது அங்கத்தவர்கள் புரிந்து வருகிறார்கள்.

புதிதாகத் தொடங்கப்பட்ட "சமூகச் சந்திப்பு" என்கின்ற வேலைத்திட்டதத்தின் மூலம்புதிதாக குடியேறியவர்கள் இங்கு ஏற்கனவே வாழ்ந்து கொண்டிருக்கிற தமிழர்களை சந்திக்கும் வாய்ப்பு வளங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிதாக குடியேறியவர்களுக்கு உதவி புரிய விரும்பியவர்கள் தயவு செய்து 1300 660 629 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள்.

எமது அங்கத்தவர்கள் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீள்வாக்கெடுப்பிற்கு தேவையான உதவிகளையும் புரிந்து வருகின்றார்கள்.

**பிரச்சாரச் செயற்பாடுகள்**

எமது மாநிலத்தின் அரசியல் பிரச்சாரஒருங்கிணைப்பாளரும் சில அங்கத்தவர்களும் 15 பங்குனி 2010 அன்று அனைத்துலக மன்னிப்புச் சபையினரின் குவின்ஸ்லாந்து கிளையின் அங்கத்தவர்களை சந்தித்து உரையாடினார்கள். இந்தச் சந்திப்பில் கிறிஸ்துமஸ் தீவில் இருந்து வருகை தந்திருந்த இருவரும், கடந்த வருடம் இலங்கை அரசினால் நடாத்தப்பட்ட படுகொலையின் சிலவற்றை நேரடியாக பார்த்த இருவரும் கலந்து கொண்டார்கள். இந்த உரையாடலின் போது இலங்கை அரசு நடாத்திய மனித உரிமை மீறல்கள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

இது மட்டுமல்லாது எமது அரசியற் குழு அவுஸ்திராலியாவின் முந்தய அரசின் "செனற்றர்" அன்ட்று பிரவுண் அவர்களையும் சந்தித்து பேசியது. இதில் சில ஆலோசனைகளை வளங்கிய அன்ட்று பிரவுண், அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே இலங்கை வாழ் தமிழர்களின் உண்மை நிலையின் புரிதுணர்வை ஏற்படுத்த நாம் கடுமையாக உழைக்க வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்தினார்.

**உலகத் தமிழர் பேரவை**

கடந்த மாசி மாதம் 24ஆம் நாள் உலகத் தமிழர் பேரவையின் உத்தியோக பூர்வ தொடக்க நிகழ்வு பிரித்தானியாவின் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் எமது மாநில அங்கத்தவர் ஒருவரும் கலந்து கொண்டார். இந்நிகழ்வு மாசி மாதம் 26ம் திகதி நிரைவேறியது. இது பற்றிய ஒரு அறிக்கை குவீன்ஸ்லாந்தின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**சேவை பாராட்டு**

அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் குவீன்ஸ்லாது மாநில நடவடிக்கைகளிலும், நாடளாவிய நடவடிகைகளிலும் (முக்கியமாக தமிழ் செய்திச் சுற்றறிக்கையின் ஆசிரியராக) அயராது பாடுபட்டு உழைத்த அப்பையா இரவீந்திரனின் சேவையை எமது கிழை பாராட்டுகின்றது. இவர் தனது சேவையிலிருந்து தற்காலிக ஓய்வு எடுக்கின்றார். இவரது ஓய்வு நல்லதாக அமைய எமது ஆசிகள். ♦

# மேற்கு அவுஸ்திரேலிய மாநில அவை அறிக்கை

**புலம் பெயர்ந்த மக்களுக்கான உதவி**

கடந்த சில நாட்களாக மேற்கு அவுஸ்திரேலியாவிற்கு வேறு மாநிலங்களில் இருந்து வருகை தரும் புலம் பெயர்ந்து தஞ்சமடைந்தோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இவ்வாறு வருகை தந்தவர்களுக்கு மேற்கு அவுஸ்திரேலிய தமிழர் பேரவையின் உறுப்பினர்கள் தங்களாலான உதவியை புரிந்துவருகின்றார்கள். மேலும் மேற்கு அவுஸ்திரேலியா விமான் நிலையத்திலுள்ள தடுப்பு முகாமிற்க்கு சென்று புதிதாக வருகை தந்துள்ளவர்களை சந்தித்து வருகின்றார்கள்.

**வட்டுக்கோட்டைத் தீர்மானம் மீள்வாக்கெடுப்பு**

வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பிற்க்கு எமது கிளை அங்கத்தவர்கள் முன்னணியில் நின்று உதவி செய்வதுடன் பொருள் பலமும் அளித்து வருகிறார்கள்.

பங்குனி 18ஆம் நாள் நடைபெற்ற புலம் பெயர்ந்த மக்களிற்கான உரிமைகளை வேண்டி நிற்கும் குழு (ற்றஅண்) ஒழுங்கு செய்த கூட்டத்திற்க்கு எமது அங்கத்தவர்களில் ஒருவர் அறிமுகவுரை வழங்கினார். பல்வேறு சமூகங்களளையும் பிரதிநிதித்துவப்படுத்திய பல பேச்சாளர்கள், அவுஸ்திரேலியாவிலுள்ள அகதிகள் தடுப்பு முகாம்களை மூடிவிடும்படி அவுஸ்திரேலிய அரசாங்கத்தை வேண்டினார்கள். ♦

# தென் அவுஸ்திரேலிய மாநில அவை அறிக்கை

இவ்வருடம் மாசி மாதம் ஆறாந்திகதி (06.02.2010) மெல்பேனைச் சேர்ந்த எழுத்தாளர் திரு. எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் நூல் வெளியீட்டு விழா, இலங்கை தமிழ்ச்சங்கத்தின் அனுசரணையுடனும், தமிழர் பேரவை தென் அவுஸ்திரேலியக் கிளையின் பிரசன்னத்துடனும் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. மெல்பேனிலிருந்து வருகை தந்த பேச்சாளர்கள் ஆதரவு வழங்கிய எங்கள் அமைப்புக்களையும், வருகைதந்த மக்களையும் மிகவும் பாராட்டி பேசியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வருடம் வைகாசி மாதம் இருபத்திரெண்டாந்திகதி (22.05.2010) நினைவுகூரப்பட இருக்கும் ஞாபகார்த்த தினத்தின் ஆரம்ப ஏற்பாட்டு வேலைகளை அவுஸ்திரேலிய தமிழர் பேரவையும், இலங்கை தமிழ்ச்சங்கமும் இணைந்து ஒழுங்கமைப்புச் செய்துவருகிறது. அத்துடன் முக்கியமான விருந்தினர்களை அழைப்பது சம்பந்தமான ஆலோசனை-களையும் நடத்திவருகின்றார்கள்.

உலகத் தமிழ் பொதுமன்றத்தின் செய்திகள் அடங்கிய வெளியீட்டுப்பிரசுரம் தென் அவுஸ்திரேலிய பாரளுமன்ற உறுப்பினர்களுக்கும், மேல்சபை (செனற்) உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவுஸ்த்திரேலிய தமிழர் பேரவையின் தென் அவுஸ்திரேலியக் கிளை உபதலைவர் அவர்கள் விசேட முறையில் கவனமெடுத்து, இதன் வர்ணப் பிரதிகளை அவர்களின் உள்ளூர் அலுவலகங்களினூடாக அனுப்பி வைத்ததுடன், அவுஸ்த்திரேலிய தலைநகர் கன்பரா மத்திய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், மேலசபை (செனற்) உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டள்ளது. அத்துடன், பாரளுமன்ற உறுப்பினர்களை விரைவில் சந்திற்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்க விடயம்.26.03.2010 இல் நிதி சேகரிப்பிற்காக நடைபெற இருந்த “பொலிவூட் நடனநிகழ்ச்சி” விழா ஏற்பாட்டுக் குழுவினரால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் நிறைய நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தமையே பிற்போடப்பட்டமைக்கான காரணமாகும்.

இவ்வருடம் சித்திரை மாதம் 17ம், 18ம் திகதிகளில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் பற்றிய மீள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு அவுஸ்திரேலியா பூராகவும் இடம்பெற இருப்பதனால், தென் அவுஸ்திரேலியாவில் இதற்கான முதற்கட்ட வேலைகளான வாக்காளர் பட்டியல் தயாரித்தல், பிரச்சார நடவடிக்கை போன்ற விடயங்களை இலங்கை தமிழ்ச் சங்கமும், தமிழர் பேரவை தென் அவுஸ்திரேலியக் கிளையும் ஒன்றிணைந்து செயலப்பட்டு வருகின்றது. தபால் மூலமான வாக்குப் பதிவை மட்டுமே இங்கே நடத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயங்களாகும்.♦

# நியூ சவுத் வேல்ஸ் மாநில அவை அறிக்கை

**மதிப்பிற்குரிய லோறி ஃபேகர்சன் அவர்களும் துணை பிரதம மந்திரி மதிப்பிற்குரிய ஜூலியா கில்லாட் அவர்களும் பங்கேற்ற இராப்போசனம்**

மதிப்பிற்குரிய லோறி ஃபேகர்சன் அவர்களும் துணை பிரதம மந்திரி மதிப்பிற்குரிய ஜூலியா கில்லாட் அவர்களும் இணைந்து வழங்கிய உதவிப் பணம் திரட்டும் இராப்போசன விருந்தில் அவுஸ்திரேலிய தமிழ் பேரவையின் சார்பில் நியூ சவுத் வேல்ஸின் பிரதிநிதிகள் ப்ங்கேற்றார்கள். இதில் நாம் துணைப் பிரதம மந்திரி ஜூலியா கில்லாட்டுடன் சந்தித்து தமிழர்கள் எதிர்னோக்கியுள்ள பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடினோம்.

**வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பு**

எமது கிளையின் அங்கத்தவர்கள் மேற்குறிப்பிட்ட வாக்கெடுப்பை முன்னெடுக்கும் குழுவிற்க்கு தங்களாலான உதவிகளை செய்து வருகின்றார்கள். வாக்காளர்களின் தரவை சேகரிப்பதிலும் அவற்றைத் தொகுப்பதிலும் எமது அங்கத்தவர்கள் முன்னின்று உழைக்கின்றார்கள். தமிழர் மீள்வாக்கெடுப்பு குழு 'இன்பத் தமிழ்' வானொலியில் 21, பங்குனி 2010ல் ஒழுங்குபடுத்திய நிகழ்ச்சிக்கு நாம் உதவி வழங்கினோம்.இந் நிகழ்ச்சியில் எமது அங்கத்தவர்கள் பங்கேற்றி மும்முரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வானொலி கேட்கும் இரசிகர்களை இவ் வாக்கெடுப்பிற்க்கு பதிவு செய்ய ஊக்கப்படுத்தினார்கள்.

**புலம் பெயர்ந்தவர்களுடன் இணைந்த செயற்பாடு**

விலாவூட் தடுப்பு முகாமில் உள்ள தமிழர்களுடன் நாம் தொடர்ந்தும் தொடர்பில் உள்ளோம். அதுமட்டுமல்லாமல், நாம் சமூகத்திலுள்ள புலம் பெயர்ந்தவர்களுக்காக உழைக்கும் வேறு குழுக்களுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். புலம்பெயர்ந்த மக்களின் நிலையை பற்றி தொடர்ந்தும் பல அரசியல் வாதிகளுடன் கலந்தாலோசித்து அம் மக்களிற்கான உதவிகளை பெற்றுக்கொடுக்கின்றோம்.

**உலக மகளிர் தினம் அனுசரிப்பு**

சிட்னியில் வாழும் தமிழ் பெண்களால் நிறுவப்பட்ட 'நீதிக்காக் போராடும் பெண்கள்' என்ற குழு பெண்களுக்காகப் போராடும் மற்ற குழுக்களுடன் இணைந்து செயற்படுகின்றது. இந்த குழுவில் தமிழர் அல்லாத பெண்களும் இணைந்துள்ளார்கள்.

இவ்வருடம் பங்குனி 6ம் நாள் உலக மகளிர் தினத்தை ஒட்டி இடம் பெற்ற நிகழ்வில் எமது போராட்டத்தினைச் சித்தரிக்கும் வண்ணம் ஒரு நாட்டிய நிகழ்ச்சியை நாம் வழங்கினோம். இந்நிகழ்ச்சி பார்வையாளர்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெற்றது.

www.tamiljustice.com

http://www.flickr.com/photos/44166732@N02/sets/72157622980169087/

http://www.flickr.com/photos/44166732@N02/sets/72157622979184647/

**'மிரக்' இல் கப்பலில் தரித்துள்ள அகதிகளிற்கு ஆதரவளிக்கும் பேரணி**

இந்தோனேசியாவின் மிரக் இல் தமிழ் அகதிகள் அடங்கிய படகு தடுத்து வைக்கப்பட்டு 150 நாள் நிறைவடைந்ததை எடுத்துக்காட்டுவதற்காக நடைபெற்ற கண்டனப் பேரணியைப் பற்றி நாம் பிரச்சாரப்படுத்தியது மட்டுமல்லாமல் எமது குழு பிரதிநிதிகள் பங்குபற்றினார்கள். இதில் எமது பிரதிநிதி மேடைப்பேச்சாற்றினார்.

**குடிவரவுத் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு**

எமது பிரதிநிதிகளும் சில சட்ட வல்லுனர்களும் ஒன்றிணைந்து அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் சந்தித்தோம். இந்த சந்திப்பில் 'கிறிஸ்துமஸ்' தீவிலும் வில்லாவூட் தடுப்பு முகாமிலும் உள்ள தமிழர்களின் அன்றாட பிரச்சனைகளைப் பற்றி நாம் எடுத்துரைத்து அவர்களின் பிரச்சனைகளிற்கு தீர்வுகள் கிட்ட வழிசமைத்தோம். ♦

# நியூ சவுத் வேல்ஸ் மாநில அவை அறிக்கை

**மதிப்பிற்குரிய லோறி ஃபேகர்சன் அவர்களும் துணை பிரதம மந்திரி மதிப்பிற்குரிய ஜூலியா கில்லாட் அவர்களும் பங்கேற்ற இராப்போசனம்**

மதிப்பிற்குரிய லோறி ஃபேகர்சன் அவர்களும் துணை பிரதம மந்திரி மதிப்பிற்குரிய ஜூலியா கில்லாட் அவர்களும் இணைந்து வழங்கிய உதவிப் பணம் திரட்டும் இராப்போசன விருந்தில் அவுஸ்திரேலிய தமிழ் பேரவையின் சார்பில் நியூ சவுத் வேல்ஸின் பிரதிநிதிகள் ப்ங்கேற்றார்கள். இதில் நாம் துணைப் பிரதம மந்திரி ஜூலியா கில்லாட்டுடன் சந்தித்து தமிழர்கள் எதிர்னோக்கியுள்ள பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடினோம்.

**வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பு**

எமது கிளையின் அங்கத்தவர்கள் மேற்குறிப்பிட்ட வாக்கெடுப்பை முன்னெடுக்கும் குழுவிற்க்கு தங்களாலான உதவிகளை செய்து வருகின்றார்கள். வாக்காளர்களின் தரவை சேகரிப்பதிலும் அவற்றைத் தொகுப்பதிலும் எமது அங்கத்தவர்கள் முன்னின்று உழைக்கின்றார்கள். தமிழர் மீள்வாக்கெடுப்பு குழு 'இன்பத் தமிழ்' வானொலியில் 21, பங்குனி 2010ல் ஒழுங்குபடுத்திய நிகழ்ச்சிக்கு நாம் உதவி வழங்கினோம்.இந் நிகழ்ச்சியில் எமது அங்கத்தவர்கள் பங்கேற்றி மும்முரமான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வானொலி கேட்கும் இரசிகர்களை இவ் வாக்கெடுப்பிற்க்கு பதிவு செய்ய ஊக்கப்படுத்தினார்கள்.

**புலம் பெயர்ந்தவர்களுடன் இணைந்த செயற்பாடு**

விலாவூட் தடுப்பு முகாமில் உள்ள தமிழர்களுடன் நாம் தொடர்ந்தும் தொடர்பில் உள்ளோம். அதுமட்டுமல்லாமல், நாம் சமூகத்திலுள்ள புலம் பெயர்ந்தவர்களுக்காக உழைக்கும் வேறு குழுக்களுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றோம். புலம்பெயர்ந்த மக்களின் நிலையை பற்றி தொடர்ந்தும் பல அரசியல் வாதிகளுடன் கலந்தாலோசித்து அம் மக்களிற்கான உதவிகளை பெற்றுக்கொடுக்கின்றோம்.

**உலக மகளிர் தினம் அனுசரிப்பு**

சிட்னியில் வாழும் தமிழ் பெண்களால் நிறுவப்பட்ட 'நீதிக்காக் போராடும் பெண்கள்' என்ற குழு பெண்களுக்காகப் போராடும் மற்ற குழுக்களுடன் இணைந்து செயற்படுகின்றது. இந்த குழுவில் தமிழர் அல்லாத பெண்களும் இணைந்துள்ளார்கள்.

இவ்வருடம் பங்குனி 6ம் நாள் உலக மகளிர் தினத்தை ஒட்டி இடம் பெற்ற நிகழ்வில் எமது போராட்டத்தினைச் சித்தரிக்கும் வண்ணம் ஒரு நாட்டிய நிகழ்ச்சியை நாம் வழங்கினோம். இந்நிகழ்ச்சி பார்வையாளர்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெற்றது.

www.tamiljustice.com

http://www.flickr.com/photos/44166732@N02/sets/72157622980169087/

http://www.flickr.com/photos/44166732@N02/sets/72157622979184647/

**'மிரக்' இல் கப்பலில் தரித்துள்ள அகதிகளிற்கு ஆதரவளிக்கும் பேரணி**

இந்தோனேசியாவின் மிரக் இல் தமிழ் அகதிகள் அடங்கிய படகு தடுத்து வைக்கப்பட்டு 150 நாள் நிறைவடைந்ததை எடுத்துக்காட்டுவதற்காக நடைபெற்ற கண்டனப் பேரணியைப் பற்றி நாம் பிரச்சாரப்படுத்தியது மட்டுமல்லாமல் எமது குழு பிரதிநிதிகள் பங்குபற்றினார்கள். இதில் எமது பிரதிநிதி மேடைப்பேச்சாற்றினார்.

**குடிவரவுத் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு**

எமது பிரதிநிதிகளும் சில சட்ட வல்லுனர்களும் ஒன்றிணைந்து அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் சந்தித்தோம். இந்த சந்திப்பில் 'கிறிஸ்துமஸ்' தீவிலும் வில்லாவூட் தடுப்பு முகாமிலும் உள்ள தமிழர்களின் அன்றாட பிரச்சனைகளைப் பற்றி நாம் எடுத்துரைத்து அவர்களின் பிரச்சனைகளிற்கு தீர்வுகள் கிட்ட வழிசமைத்தோம். ♦

# தேசிய அரசியல் செயற்பாடுகள் - மார்ச் 2010

எமது தேசிய அரசியல் குழுவினரால் கடந்த மாதத்தில் செயற்படுத்தப்பட்ட முக்கிய மூன்று நடவடிக்கைகள் தொடர்பான விபரணங்கள் இவ் அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

**உலகத் தமிழர் பேரவையின் அங்குரார்ப்பணம்**

உலகத் தமிழர் பேரவையின் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் பிரித்தானிய தமிழர் பேரவையின் சார்பில் கடந்த பெப்ரவரி மாதம் 24ந்திகதி பிரித்தானிய பாராளுமன்ற வளாகத்தில் மிகவும் வெற்றிகரமாக ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் பிரித்தானியாவின் வெளியுறவுத்துறைச்செயலர் கௌரவ டேவிட் மிலிபான்ட் உட்பட பிரித்தானியாவின் முக்கிய மூன்று கட்சிகளையும் சேர்ந்த வெளியுறவுத்துறைப் பேச்சாளர்களும் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளனர். அத்துடன் பிரித்தானிய அரசின் சில அமைச்சர்களுட்பட மூன்று கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள்இ வளர்ந்துவரும் பல அரசியல் ஆர்வலர்களும் இந்நிகழ்வில் பங்குபற்றி உரையாற்றினர். இச்சமயம் அதில் பங்குபற்றிய உலகத்தமிழர் பேரவையின் பிரதிநிதிகளுகக் பிரித்தானிய பிரதமர் கௌரவ கோர்டன் பிரவுன் அவர்களைச் சந்தித்து உரையாடவும் சந்தர்ப்பம் கிடைத்தது.

வெற்றிகரமாக முடிந்த இவ் அங்குரார்ப்பண நிகழ்வானது – பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் புலம்பெயர் தமிழர்களின் இயக்கமான “பிரித்தானிய தமிழர் பேரவையின்” செயற்பாட்டுத் திறனுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

இந்த வெற்றிக்குத் துணைபுரிந்த முக்கிய காரணிகள் வருமாறு :

1. பிரித்தானியாவின் மேம்பாடான நெறிப்படுத்தப்பட்ட அரசியல் கலாச்சாரமும் இலங்கையுடனான அதன் சரித்திர பூர்வமான அரசியல் தொடர்புகளும்
2. அங்கு வாழும் 200இ000 மேற்பட்ட தமிழ்மக்கள் தொகையும் அவர்களினால் ஏற்படுத்தப்பட்ட ஆழமான தொடர்புகளும் பொருண்மிய மேம்பாடும்
3. இவை அனைத்துக்கும் மேலாக இந்த அமைப்பின் ஆக்கபூர்வமான ஒழுங்கமைகப்பட்ட செயற்திறனும் அவர்களது கடும் உழைப்பும்.

உதாரணமாக

அவுஸ்திரேலியாவில் எமது நிலைப்பாடுகள் பிரித்தானியாவிலிருந்து மிகவும் மாறுபட்ட நிலையில் இருந்தாலும் அவர்களது அனுபவங்களையும் செயற்திறன் போன்றவற்றையும் படிப்பினையாகப் பின்பற்றுவது சாலப் பயனுடையது.

இன்னும் சில காரணிகள் உலகத்தமிழர் பேரவையின் ஆரம்பப் பொதுக்கூட்டத்தின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தன.

1. நீண்ட காலமாகத் தொடரும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற பொதுவான கருத்து பிரித்தானியாவுக்கும் மற்றைய மேற்குலக நாடுகளுக்குமிடையில் நிலவுதல்.
2. புலம்பெயர்ந்த தமிழர்களின் சமாதான முயற்சிகளுக்கு ஊக்கப்படுத்தலும் ஒத்துழைப்பும் வழங்கப்பட வேண்டும் என்ற பொதுவான கருத்தொற்றுமை தற்போது மேற்குலக கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் நிலவுதல்
3. அத்தோடு மேற்குலக நாடுகள் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் காரணிகளில் ஒன்றாக – புலம்பெயர்நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளுடன் மிக நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

(குறிப்பு : இலங்கை அரசாங்கத்தின் அரசியல்தீர்வு நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பாக மேற்குலக நாடுகள் மிகுந்த அதிருப்தி அடைந்துள்ளன.)

மேற்படி காரணிகளால் உருவாகியுள்ள இத்தகைய உயர்மட்டத் தொடர்புகள்இ இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அமைதியான – சுதந்திரமான தீர்வு ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு நாம் இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாது முறையான செயற்பாடுகளில் தொடரவேண்டும்.

உலகத்தமிழர் பேரவைக்குக் கிடைத்துள்ள இந்த அங்கீகாரம் எமக்கு மனநிறைவைத் தந்தாலும்- சர்வதேச மட்டத்தில் - தமிழர் விடயம் என்பது அவர்களுக்கு ஒரு பெரிய பிரச்சினை இல்லை. இந்நிகழ்வில் பங்குபற்றிய பிரதிநிதிகளின் பல்வேறுபட்ட கருத்துப் பகிர்வுகள் என்பது – மேற்குலக அரசுகளை கவர்ந்திழுக்கும் பணியில் நாம் இன்னும் நீண்ட தூரம் போகவேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

“இலங்கை அரசியல் சட்டத்தில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்” என்ற அவசியத்ததை பரித்தானியா அதிகார பூர்வமாக அறிவித் துள்ளது. அவுஸ்திரேலியாவில் எமது வெள்யுறவுத்துறை அமைச்சர் திரு. ஸ்ரீபன் ஸிமித் அவர்கள் ‘அதிகாரப் பகிர்வு – சுயாட்சி’ போன்ற சொல்லாடல்களை பத்திரிகையாளர் சந்திப்புக்களில் பயன்படுத்தி உள்ளார்.

ஆனால் இவை எவையுமே இந்த நாடுகளின் அரசாங்கத்தினதோ அரசியல் கட்சிகளினதோ கொள்கைகளாக எடுத்துரைக்கப்படவில்லை.

**குடிவரவுஇ குடியுரிமை திணைக்களத்துடன் பேரவையின் சந்திப்பு:**

குடிவரவுஇ குடியுரிமைத்துறை அமைச்சர் திரு கிறிஸ்

தொடர்ச்சி 7 ம் பக்கம்

## அரசியல் செயற்பாடுகள் - மார்ச் 2010 ... தொடர்கின்றது

இவன்ஸ் அவர்களது மூத்த ஆலோசகர் திரு பிரண்டன் பியர்ஸை கடந்த மார்ச் மாதம் 1ந் திகதி அவரது அலுவலகத்தல் சந்தித்தனர். ஒரு மணி நேரத்துக்கு மேலாக நீடித்த இந்த மிகவும் பயனள்ளதாக அமைந்தது. இங்கு கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்கள்:

- ‘துயருற்ற பெண்களுக்கான’ பிரிவில் தமிழ் பெண்களுக்கு ஒரு பங்கீட்டை ஒதுக்குவது.
- தமிழர்கள் பாதுகாப்பு பத்திரம் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் நீண்ட காலதாமதமும்இ இதனால் கிறிஸ்மஸ் தீவுஇ விலாவூட் முகாம்களில் உள்ள அகதிகள் மத்தியில் நிலவும் விரக்திமனப்பான்மை.
- ‘மேரக்’ படகு அகதிகள் நிலைதொடர்பான சமூகத்தின் சிந்தனையும்இ இது விடயத்தில் அரசுடன் இணைந்து செயல்பட்டு இவ் விடயத்தினை முடிவுக்குக் கொண்டுவருதல்.
- இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கான அரசியல் தீர்வும் பொருள்மிய செயற்பாட்டுத் திறனும்இ இதனால் சொந்தமண்ணிலிருந்து வெளியேறும் மக்களின் எண்ணிக்கை குறைவடைதல்.

**இந்த சந்திப்பின் பயனான வெளிப்பாடுகள்:**

1. எமது பேரவையின்இ பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் திறனும்இ அரசாங்கத்துடன் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்படும் தன்மையும் திரு பிரண்டன் பியர்ஸ் பெருமனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
2. அமைச்சர் கிறிஸ் இவன்ஸ் அவர்களுடனும்இ கிறிஸ்மஸ்தீவு தடுப்புமுகாம் நிர்வாகத்
3. துடன் சந்திப்புக்களை ஏற்படுத்ததிக்கொள்வது.
4. பேரிடருற்ற பெண்கள் விடயம்இ அகதிகள் அந்தஸ்து விசா ஆகியவற்றுக்கு பொறுப்பானமூத்த குடிவரவு அதிகாரிகளுடனான சந்திப்புக்கள்.
5. விலாவூட் தடுப்பு நிலையத்திலுள்ள இரு குடும்பங்கள் பற்றிய விபரங்கள் எடுக்கப்பட்டமை. அவர்களுக்கு வேண்டிய உதவிகள் வழங்குவது தொடர்பாக ஆராய்தல்.
6. பேரவை தனது அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றை நிறுவி மனிதாபப் பணிகளை மேற்கொள்ளும் எண்ணக் கருவுக்கான ஆதரவு.

**ஐநா அகதிகளுக்கான ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான மீளாய்வும் பேரவையின் செயற்பாடுகளும்:**

ஐநா அகதிகளுக்கான ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான வரைபுகளை மீளாய்வு செய்கிறது. இதன்மூலம் இலங்கையின் பல பகுதிகள் தமிழருக்கான பாதுகாப்பான பகுதிகளாக பிரகடனப்படுத்த வாய்ப்புள்ளது. இத்தகைய முடிவுகளை வரவேற்கக் கூடிய நிலையில் அவுஸ்திரேலிய அரசாங்கமும் இருப்பதான ஒரு கருத்தும் நிலவுகிறது. இந்த அரசாங்கம் விரைவில் சந்திக்கவிருக்கும் கடும் போட்டியான பொதுத் தேர்தலில்இ இந்த அகதிகள் பிரச்சனை முக்கிய இடத்தைப் பிடிக்கும். ஐநா அகதிகளுக்கான ஆணைக்குழுவின் மீளாய்வின் பாதகமான முடிவுகளும்இ அது தொடர்பான எமது அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் தமிழ் அகதிகள் நிலைப்பாட்டில் இங்கு அவுஸ்திரேலியாவிலும் ஏனைய பல நாடுகளிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

எமது பேரவை இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவதுடன்இ இது தொடர்பான ஆவணம் ஒன்றினைத் தயாரித்து ஐநாஅகதிகளுக்கான ஆணைக்குழுஇ அவுஸ்திரேலிய அரசாங்கம்இ பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு கையளிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

தற்போது இலங்கையில் நிலவும் பேரவல நிலமைகளை எடுத்துக்காட்டுவதுடன்இ இலங்கைத் தமிழ் மக்களுக்கு இன்னும் சுமுக நிலமை ஏற்படவில்லை என்பதுடன் அப்படி எடுத்துக்கொள்வது பொருத்தமற்றது என்பது எமது பேரவையின் நிலைபபாடாகும்.

மேலும் எமது செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் அடுத்த செய்திமடலில் இடம்பெறும். ♦

## அரசியல் செயற்பாடுகள் - மார்ச் 2010 ... தொடர்கின்றது

இவன்ஸ் அவர்களது மூத்த ஆலோசகர் திரு பிரண்டன் பியர்ஸை கடந்த மார்ச் மாதம் 1ந் திகதி அவரது அலுவலகத்தல் சந்தித்தனர். ஒரு மணி நேரத்துக்கு மேலாக நீடித்த இந்த மிகவும் பயனள்ளதாக அமைந்தது. இங்கு கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்கள்:

- 'துயருற்ற பெண்களுக்கான' பிரிவில் தமிழ் பெண்களுக்கு ஒரு பங்கீட்டை ஒதுக்குவது.
- தமிழர்கள் பாதுகாப்பு பத்திரம் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் நீண்ட காலதாமதமும்இ இதனால் கிறிஸ்மஸ் தீவுஇ விலாவூட் முகாம்களில் உள்ள அகதிகள் மத்தியில் நிலவும் விரக்திமனப்பான்மை.
- 'மேரக்' படகு அகதிகள் நிலைதொடர்பான சமூகத்தின் சிந்தனையும்இ இது விடயத்தில் அரசுடன் இணைந்து செயல்பட்டு இவ் விடயத்தினை முடிவுக்குக் கொண்டுவருதல்.
- இலங்கையின் வடக்கு கிழக்கு தமிழர்களுக்கான அரசியல் தீர்வும் பொருன்மிய செயற்பாட்டுத் திறனும்இ இதனால் சொந்தமண்ணிலிருந்து வெளியேறும் மக்களின் எண்ணிக்கை குறைவடைதல்.

**இந்த சந்திப்பின் பயனான வெளிப்பாடுகள்:**

1. எமது பேரவையின்இ பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் திறனும்இ அரசாங்கத்துடன் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்படும் தன்மையும் திரு பிரண்டன் பியர்ஸ் பெருமனதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
2. அமைச்சர் கிறிஸ் இவன்ஸ் அவர்களுடனும்இ கிறிஸ்மஸ்தீவு தடுப்புமுகாம் நிர்வாகத்
3. துடன் சந்திப்புக்களை ஏற்படுத்ததிக்கொள்வது.
4. பேரிடருற்ற பெண்கள் விடயம்இ அகதிகள் அந்தஸ்து விசா ஆகியவற்றுக்கு பொறுப்பானமூத்த குடிவரவு அதிகாரிகளுடனான சந்திப்புக்கள்.
5. விலாவூட் தடுப்பு நிலையத்திலுள்ள இரு குடும்பங்கள் பற்றிய விபரங்கள் எடுக்கப்பட்டமை. அவர்களுக்கு வேண்டிய உதவிகள் வழங்குவது தொடர்பாக ஆராய்தல்.
6. பேரவை தனது அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றை நிறுவி மனிதாபப் பணிகளை மேற்கொள்ளும் எண்ணக் கருவுக்கான ஆதரவு.

**ஐநா அகதிகளுக்கான ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான மீளாய்வும் பேரவையின் செயற்பாடுகளும்:**

ஐநா அகதிகளுக்கான ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான வரைபுகளை மீளாய்வு செய்கிறது. இதன்மூலம் இலங்கையின் பல பகுதிகள் தமிழருக்கான பாதுகாப்பான பகுதிகளாக பிரகடனப்படுத்த வாய்ப்புள்ளது. இத்தகைய முடிவுகளை வரவேற்கக் கூடிய நிலையில் அவுஸ்திரேலிய அரசாங்கமும் இருப்பதான ஒரு கருத்தும் நிலவுகிறது. இந்த அரசாங்கம் விரைவில் சந்திக்கவிருக்கும் கடும் போட்டியான பொதுத் தேர்தலில்இ இந்த அகதிகள் பிரச்சனை முக்கிய இடத்தைப் பிடிக்கும். ஐநா அகதிகளுக்கான ஆணைக்குழுவின் மீளாய்வின் பாதகமான முடிவுகளும்இ அது தொடர்பான எமது அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் தமிழ் அகதிகள் நிலைப்பாட்டில் இங்கு அவுஸ்திரேலியாவிலும் ஏனைய பல நாடுகளிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

எமது பேரவை இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்துவதுடன்இ இது தொடர்பான ஆவணம் ஒன்றினைத் தயாரித்து ஐநாஅகதிகளுக்கான ஆணைக்குழுஇ அவுஸ்திரேலிய அரசாங்கம்இ பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு கையளிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. தற்போது இலங்கையில் நிலவும் பேரவல நிலமைகளை எடுத்துக்காட்டுவதுடன்இ இலங்கைத் தமிழ் மக்களுக்கு இன்னும் சுமுக நிலமை ஏற்படவில்லை என்பதுடன் அப்படி எடுத்துக்கொள்வது பொருத்தமற்றது என்பது எமது பேரவையின் நிலைபபாடாகும்.

மேலும் எமது செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் அடுத்த செய்திமடலில் இடம்பெறும். ♦

# வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பின் ஒரு பார்வை

செ. பத்மலிங்கம்- அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை:
(விக்டோரியா)

இலங்கையின் வடக்கு கிழக்கு வாழ் ஈழத்தமிழர்களால் ஒட்டு மொத்தமாக 1976 இல் கொடுத்த ஆணையினை நாங்கள் மீண்டுமொருமுறை சுதந்திரமாக நாம் வாழும் புலம் பெயர் நாடான அவுஸ்திரேலியா முழுவதும் செயற்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதில் அவுஸ்திரேலிய ஈழத்தமிழ் மக்கள் திரண்டு வந்து பங்கேற்குமாறு அவுஸ்திரேலியா வாக்கு கணிப்பு குழு வேண்டி நிற்கிறது.

இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்றால் என்ன என்ற கேள்வியை நோக்கமுன், மீண்டுமொரு வாக்குக்கணிப்பு புலம் பெயர் நாடான அவுஸ்திரேலியாவில் இன்று அவசியமா என்பதை ஆராய்வது மிகவும் சிறந்தது.

கடந்த 60 ஆண்டு போராட்டத்தில் முதல் 30 வருடம் அகிம்சை போராட்டத்தை நடத்திய காலத்தில் சிங்களத்தின் இனவாத வன்முறை காரணமாக எமது அடிமை விலங்கை உடைக்க அடுத்த 30 வருடம் ஆயுதப் போராட்டம் நடத்தப்பட்டது மட்டுமல்லாமல், இக்காலத்தில் தமிழ் ஈழ அரசு ஒன்று உருவாக்கப்பட்டு ஒரு தனி அரசு ஆட்சி நடைபெற்றது என்பது யாவரும் அறிந்த உண்மை. இலங்கையில் இனவாத சிங்கள பௌத்த அரசு அனைத்துலக அரசுகளின் ஆசீர்வாதத்துடன் தமிழ் மக்களின் தன்னாட்சியையழித்து ஆயிரம் ஆயிரம் நமது உறவுகளை உயிருடன் புதைத்தும் சிறைப்பிடித்தும் வைத்திருப்பதும் யாவரும் அறிந்ததே.

இலங்கை அரசோடு மட்டும் இருந்த அகிம்சை போராட்டமானது படிப்படியாக ஆயுதப் போராட்டமாக மாறி சர்வதேச நாடுகளின் பெரும் திரையில் வாழ்ந்து இன்று ஐ. நா வரை எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழர்களாகிய நாம் ஜனநாயக முறையில் எமது அபிலாசைகளை தெரிவித்து எமது பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியுமென்று சர்வதேசம் நம்பிக்கை கொண்டுள்ள இந்தக் காலகட்டத்தில், தமிழர்களாகிய நாம் 1976 இல் இலங்கையில் வடக்கு கிழக்கு மக்கள் ஒட்டு மொத்தமாக அளித்த ஆணையான வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பை அவுஸ்திரேலியாவில் வெற்றிகரமாக நடத்தி முடிப்பதன் மூலம், தமிழர்களாகிய நாம் மீண்டுமொருமுறை சிங்கள தேசத்திற்கும், சர்வதேசத்துக்கும் எமது அபிலாசைகளை தெரியப்படுத்தலாம். இந்த வாக்களிப்பானது அரசியல் சார்பற்றது; ஒவ்வொரு தமிழ்மகனின் கருத்துக்கு சுதந்திரமாக வாக்களிக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வாக்களிப்பின் மூலம், தமிழர்களாகிய நாம் எமது தாயகத்தில் உள்ள மக்கள் முழுமையானசுயநிர்ணய உரிமையுடன் வாழ விரும்புகிறார்கள் என்பதை ஜனநாயக முறையில் எடுத்த சொல்ல நிற்பதே இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பு.

**வட்டுக்கோட்டை தீர்மானம் ஏன் உருவாக்கப்பட்டது**

இலங்கையில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஒன்றுபட்ட இலங்கைத் தீவுக்குள் எமது அபிலாசைகளை பெறுவதற்கு பல்வேறு தமிழ் அமைப்புகளின் மூலம் 60 ஆண்டு காலம் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியைத் தழுவியதால், எமது பாரம்பரிய தாயகத்தை மீளப்பெறுவதற்கும், எமது அபிலாசைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 1976 இல் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளாலும் ஒன்றிணைத்து எடுக்கப்பட்ட வரலாற்று தீர்மானமே வட்டுக்கோட்டைத்தீர்மானம்.

**வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்ன சொல்கின்றது.**

ஈழத்தமிழர்கள் ஐரோப்பியா எமது நிலங்களை ஆக்கிரமிப்பதற்கு முன் பல்லாண்டு காலமாக தமிழர்கள் பூரண இறைமையும் சுதந்திரமும் உள்ள பாரம்பரிய தாயக பூமியில் வாழ்ந்து வந்துள்ளார்கள்.

பாரம்பரிய தாயக பூமியில் வாழ்ந்த தமிழர்கள் ஒரு தனி நாட்டை பிரதிநிதித்த்வப் படுத்துகிறார்கள். இலங்கயில் எப்பகுதியில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களும், புலம் பெயர் நாடுகளில் ஈழத்தைப்

தொடர்ச்சி 9 ம் பக்கம்

## வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பின் ஒரு பார்வை...தொடர்கின்றது

பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களும் தமது பாரம்பரிய பிரதேசத்தில் பிரஜா உரிமை பெற உரித்துடையவர்கள்.

**புலம் பெயர்ந்த நாங்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்வதின் மூலம் எதை தெரிவிக்கின்றோம்**

தனி நாட்டை அடையாளப்படுத்தும் இலங்கை தீவில் வாழ்கின்ற தமிழர்களின் ஒரு பாரம்பரிய தாயகத்தையும், சுய நிர்ணய உரிமையையும் கொண்டிருப்பதால், அவர்களின் வழித் தோன்றியவர்களான நாம் பூரண இறைமையும், சுதந்திரமும் உள்ள தமிழ் ஈழத்தை இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் நிறுவுவதற்கு எமது பூரண வருப்பத்தை இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்வதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒன்று பட்ட இலங்கையில் அரசியல் யாப்பு அல்லது அமைப்பை தமிழர்களின் விருப்பிற்கு அமையாமல், சட்டத்துக்கு முரணான முறையில் உருவாக்கப்பட்டதே நாம் இன்று உலகெல்லாம் சிதறடித்து தஞ்சமடையக் காரணம். இந்த சட்டத்திற்கு முரணான முறையில் உருவாக்கப்பட்ட அரசியலமைபு காரணமாக எமது பாரம்பரிய பிரதேசம் அன்றும் இன்றும் துண்டாடப்படுகின்றது. ஆகவே இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பில் ஈழத்தை தாயகமாகக் கொண்ட எந்த ஒரு தமிழனும் தனது தாயகம் சம்பந்தமாக ஜனநாயகமான முறையில் பங்கெடுக்கவும் கருத்தை தெரிவிக்கவும் பிறப்பால் உரிமையுடையவர் என்று கூறுகின்றது.

**இந்த வாக்களிப்பில் கலந்து கொள்வதன் மூலம் எதை நாம் சாதிக்க உள்ளோம்**

- இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை மீண்டும் மீண்டும் உணர்த்துதல்
- இக்கருத்துக்கணிப்பு முடிவுகள் மூலம் தமிழர் அபிலாசைகளை உலக நாடுகளுக்கும் தொண்டர் நிறுவனங்களுக்கும் எடுத்து சொல்ல துணை நிற்றல்.
- இக்கருத்துக்கணிப்பு அவுஸ்திரேலிய அரசியல் பிரமுகர்களுக்கு இலங்கையில் இன முரண்பாட்டுத் தீர்வை ஏற்படுத்த துணை புரியும்.
- சர்வதேச மட்டத்தில் தமிழரின் இனப்பிரச்சனை தொடர்பான ஒருமைப்பாட்டினை வளர்க்க உதவும்.
- 30 வருட அகிம்சை போராட்டமும், 30 வருட ஆயுதப் போராட்டங்களும் நியாயமானது என்பதனை உலகுக்கு திரும்பத் திரும்ப உணர்த்தும்.
- இது எமது இறைமைக்கான நடவடிக்கை என்றும் எம்மை ஆளும் உரிமையோ, இறைமையோசிங்கள அரசுக்கு கிடையாது.
- இலங்கையின் அரசியல் அமைப்பை மாற்றியமைக்க அழுத்தம் கொடுக்கும்
- அவுஸ்திரேலிய தமிழர் பேரவை தன் செயற்பாடுகளை துரிதமாக செயல்படுத்த உதவும்
- இது 2010 அவுஸ்திரேலியாவில் வாழுகின்ற 18 வயதிற்க்கு மேற்பட்ட ஈழத்தமிழரின் புள்ளிவிபரம், இதன் மூலம் வரும் காலத்தில் தமது சந்ததி பல பயன்களை அடையலாம்

**இப்பொழுது வாக்களிப்பு அவசியமா?**

2009 வைகாசி மாதத்திற்கு பின்னர் ஈழத்தமிழர்களின் நாளாந்த் இயக்க நிலையில் ஒரு தேக்க நிலை தென்படுவதன் காரணம் அங்கு ஒரு தகுதியான தலைமைத்துவம் இல்லாமையே. இந்த தலைமைத்துவம் புலம் பெயர் வாழ் தமிழர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், நீதியான சுதந்திரமான முறையில் ஈழத்தமிழரின் அபிலாசைகளை, அரசியல் அடிப்படை வரையறுத்து அறிந்து கொள்வது புலம் பெயர் தமிழர்களின் உரிமையும் கடமையுமமாகும். இதை நிறைவேற்றும் ஒரு ஜனநாயக முறையே இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள் வாக்கெடுப்பாகும். இந்த பாரிய கடமையை செய்யும்படி அவுஸ்திரேலிய தமிழர் பேரவை உரிமையோடு அங்கத்தவர்களை வேண்டி நிற்கின்றது. அது மட்டுமல்லாமல் இந்த அவுஸ்திரேலிய தமிழர் பேரவை ஈழத்தமிழர்களை ஒரு குடையின் கீழ் ஒன்று சேர்ப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு ஜனநாயக அமைப்பு

தொடர்ச்சி 11 ம் பக்கம்

## வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பின் ஒரு பார்வை...தொடர்கின்றது

பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்களும் தமது பாரம்பரிய பிரதேசத்தில் பிரஜா உரிமை பெற உரித்துடையவர்கள்.

**புலம் பெயர்ந்த நாங்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்வதின் மூலம் எதை தெரிவிக்கின்றோம்**

தனி நாட்டை அடையாளப்படுத்தும் இலங்கை தீவில் வாழ்கின்ற தமிழர்களின் ஒரு பாரம்பரிய தாயகத்தையும், சுய நிர்ணய உரிமையையும் கொண்டிருப்பதால், அவர்களின் வழித் தோன்றியவர்களான நாம் பூரண இறைமையும், சுதந்திரமும் உள்ள தமிழ் ஈழத்தை இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் நிறுவுவதற்கு எமது பூரண வருப்பத்தை இந்த வாக்கெடுப்பில் கலந்து கொள்வதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒன்று பட்ட இலங்கையில் அரசியல் யாப்பு அல்லது அமைப்பை தமிழர்களின் விருப்பிற்கு அமையாமல், சட்டத்துக்கு முரணான முறையில் உருவாக்கப்பட்டதே நாம் இன்று உலகெல்லாம் சிதறடித்து தஞ்சமடையக் காரணம். இந்த சட்டத்திற்கு முரணான முறையில் உருவாக்கப்பட்ட அரசியலமைபு காரணமாக எமது பாரம்பரிய பிரதேசம் அன்றும் இன்றும் துண்டாடப்படுகின்றது. ஆகவே இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பில் ஈழத்தை தாயகமாகக் கொண்ட எந்த ஒரு தமிழனும் தனது தாயகம் சம்பந்தமாக ஜனநாயகமான முறையில் பங்கெடுக்கவும் கருத்தை தெரிவிக்கவும் பிறப்பால் உரிமையுடையவர் என்று கூறுகின்றது.

**இந்த வாக்களிப்பில் கலந்து கொள்வதன் மூலம் எதை நாம் சாதிக்க உள்ளோம்**

- இலங்கையில் உள்ள தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை மீண்டும் மீண்டும் உணர்த்துதல்
- இக்கருத்துக்கணிப்பு முடிவுகள் மூலம் தமிழர் அபிலாசைகளை உலக நாடுகளுக்கும் தொண்டர் நிறுவனங்களுக்கும் எடுத்து சொல்ல துணை நிற்றல்.
- இக்கருத்துக்கணிப்பு அவுஸ்திரேலிய அரசியல் பிரமுகர்களுக்கு இலங்கையில் இன முரண்பாட்டுத் தீர்வை ஏற்படுத்த துணை புரியும்.
- சர்வதேச மட்டத்தில் தமிழரின் இனப்பிரச்சனை தொடர்பான ஒருமைப்பாட்டினை வளர்க்க உதவும்.
- 30 வருட அகிம்சை போராட்டமும், 30 வருட ஆயுதப் போராட்டங்களும் நியாயமானது என்பதனை உலகுக்கு திரும்பத் திரும்ப உணர்த்தும்.
- இது எமது இறைமைக்கான நடவடிக்கை என்றும் எம்மை ஆளும் உரிமையோ, இறைமையோசிங்களஅரசுக்கு கிடையாது.
- இலங்கையின் அரசியல் அமைப்பை மாற்றியமைக்க அழுத்தம் கொடுக்கும்
- அவுஸ்திரேலிய தமிழர் பேரவை தன் செயற்பாடுகளை துரிதமாக செயல்படுத்த உதவும்
- இது 2010 அவுஸ்திரேலியாவில் வாழுகின்ற 18 வயதிற்க்கு மேற்பட்ட ஈழத்தமிழரின் புள்ளிவிபரம், இதன் மூலம் வரும் காலத்தில் தமது சந்ததி பல பயன்களை அடையலாம்

**இப்பொழுது வாக்களிப்பு அவசியமா?**

2009 வைகாசி மாதத்திற்கு பின்னர் ஈழத்தமிழர்களின் நாளாந்த் இயக்க நிலையில் ஒரு தேக்க நிலை தென்படுவதன் காரணம் அங்கு ஒரு தகுதியான தலைமைத்துவம் இல்லாமையே. இந்த தலைமைத்துவம் புலம் பெயர் வாழ் தமிழர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், நீதியான சுதந்திரமான முறையில் ஈழத்தமிழரின் அபிலாசைகளை, அரசியல் அடிப்படை வரையறுத்து அறிந்து கொள்வது புலம் பெயர் தமிழர்களின் உரிமையும் கடமையுமமாகும். இதை நிறைவேற்றும் ஒரு ஜனநாயக முறையே இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மீள் வாக்கெடுப்பாகும். இந்த பாரிய கடமையை செய்யும்படி அவுஸ்திரேலிய தமிழர் பேரவை உரிமையோடு அங்கத்தவர்களை வேண்டி நிற்கின்றது. அது மட்டுமல்லாமல் இந்த அவுஸ்திரேலிய தமிழர் பேரவை ஈழத்தமிழர்களை ஒரு குடையின் கீழ் ஒன்று சேர்ப்பதற்காக அமைக்கப்பட்ட ஒரு ஜனநாயக அமைப்பு.

தொடர்ச்சி 11 ம் பக்கம்

# உண்மை வெளிப்படுவதை தடுக்கும் முயற்சி? வன்னியன் - மார்ச் 23rd, 2010

வன்னிப் பெருநிலப் பரப்பில் நடைபெற்ற போரின் போது, இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் அரச படைகள் நடத்தியதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் விவகாரம் சூடுபிடித்து வருகிறது. நாங்களுமா இதைச் செய்தோம் என்று வரிந்து கட்டிக் கொண்டு ஐக்கியநாடுகள் சபையுடன் அதன் செயலா ளர் நாயகம் பான் கீமூனுடன் முட்டிமோதிக் கொண்டு இருக்கிறது எமது நாட்டு அரசு.

எப்படியும், என்ன பாடுபட்டும், தலையைக் கீழாக வைத்தேனும் தாம் சுத்தவாளி என்ற நிலைப்பாட்டை ஸ்திரமாக்கி விட இலங்கை அங்கும் இங்கும் என்று ஓடி ஓடி ஆதரவு திரட்டி வருகிறது.

இத்தனைக்கும், ஐ.நா.வின் செயலாளர் நாயகம் இலங்கைக்கு விஜயம் செய்து, ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுடன் பேச்சுக்கள் நடத்தியபின்னர் விடுத்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே, இது விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிபுணர் குழுவை நியமிக்கப்போவதாக பான் கீ மூன் தெளிவு படுத்தி இருந்தார். அவ்வாறு செய்வதற்கு தனக்கு அதிகாரம் ஆணை உண்டு என்பதனையும் மிக உறுதிபடத் தெரிவித்திருந்தார். இது விடயத்தை இனிமேல் நேருக்கு நேர் பான் கீமூனுடன் கையாள முடியாது என உணர்ந்து கொண்டு இப்போது ஓடிப்பிடித்து விளையாட இலங்கை அரசு முனைந்துள்ளது.

முன்னர் ஐ.நா.மன்றத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணையைக் தோற்கடிக்கச் செய்த ""ருசி"யுடன், திமிருடன் செயலாளர் நாயகத்தின் முயற் சியை, நடவடிக்கையை மடக்கி விடுவதற்கு தலையால் நடக்கத்தொடங்கி உள்ளது.

வன்னியில் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்து சொந்தத்தில் விசாரணை நடத்துவதற்கும் இலங்கை அரசு முன்வருவதாக இல்லை. ஐ.நா. செயலாளர் நாயகம் தமக்கு ஆலோசனைகளை வழங்கி நிபுணர் குழுவை நியமிப்பதையும், அவரைப்பிடித்து இவரைப்பிடித்து தடுத்து விடுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கொண்டு வர இருந்த பிரேரணையைத் தோற்கடிக்கச் செய்தது போன்று இப் போதும் பான் கீமூனின் திட்டத்தைத் தடுத்துவிட வேண் டும் என்று ஆலாய்ப் பறக்கிறது எமது நாட்டு அரசு.
அந்த முயற்சியின் ஓர் அங்கமே அணிசேரா இயக்கத் தைக் கொண்டு ஐ.நா.செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு யோச னையை கண்டிக்கச் செய்த திருக்கூத்து.
ஆனால் அந்தக் கூத்து சர்வதேச மட்டத்தில் எடுபடாது என்பதனை இலங்கை இப்போது உணர்ந்து இருக்க வேண்டும். அணிசேரா நாடுகளின் நிலைப்பாடு ஏற்றுக் கொள்ளமுடியாத ஒன்று என பிரிட்டனில் ஐ.நா பிரதிநிதி தெரிவித்திருந்ததனை எப்படி சீரணிக்கப் போகின்றது மகிந்த அரசு?

இது விடயத்தில் இலங்கை அரசுக்கு ஐ.நா சபையின் உயர்மட்டங்களுடன் ஏற்பட்டு இருக்கும் முறுகல் நிலை தொடரும் என எதிர்பார்க்கலாம். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று இலங்கை அரசு அடம்பிடித்துக் கொண்டு இருப்பதனால், ஆகப் போவது ஒன்றும் இல்லை என்ப தனை ஏன் அதனால் உணர்ந்து கொள்ளமுடியவில்லை?

வளர்ந்து வரும் ஒரு சிறிய நாட்டின் விடயத்தில் ஐ.நா சபை அதன் செயலாளர் நாயகம் இவ்வாறு விடாப்பிடியாக கயிறு போடுவது ஏன் என விளங்கவில்லை என்று ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரப்பிரதிநிதி கலாநிதி பாலித கோஹன்ன தெரிவித்து இருக்கிறார். உலக நாடுகளின் இரக்கத்துக்கு உரியதாக இலங்கையை "" மாற்றும்" புதிய தந்திரோபாயமாகவே இதனைப் பார்க்கலாம்.

ஐ.நா. சாசனத்தை மீறுவதற்கான முயற்சி என்பது ஒரு குற்றச்சாட்டு. நாடொன்றின் உள்விவகாரத்தில் தலை

தொடர்ச்சி 11 ம் பக்கம்

## உண்மை வெளிப்படுவதை தடுக்கும் முயற்சி?... தொடர்ச்சி

யிடுவது என்பது மற்றொரு குற்றச்சாட்டு.

இந்த இரண்டையும் ஒன்றை மற்றொன்றால் மூடி விவகாரத்தை தமக்கு சாதகமாக்கித் தணித்துவிடலாம் என்று இலங்கை கருதுவதாக நோக்கர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

மேலும் இந்த விவகாரத்தில் பான் கீ மூனைத் தமது பக்கத்துக்கு இழுத்துவிடவும் இலங்கை “”பெருமுயற்சி” செய்து வருவதாகவும் தகவல்கள் கசிந்து வருகின்றன.
இத்தனை ராஜதந்திரக் கூத்துகளும் ஏன்? உண் மைக்கு என்றும் அழிவில்லை. வன்னிப்பகுதியில் மனித உரிமை மீறல்களை அரசு மேற்கொள்ளவில்லை என்பது உண்மையானால், ஐ.நா செயலாளர் நாயகம் தமக்கென ஒரு நிபுணர்(ஆலோசனை) குழுவை நியமிப்பது குறித்து இலங்கை அரசு ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்? அச்ச முற வேண்டும்? அரசின் கை சுத்தமானது எனின் இலங்கை அரசே வெளிநாட்டு நிபுணர்குழு ஒன்றை நியமித்து, தனது பக்கத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வரலாமே?

தனக்கு எதிராக வரும் எந்தக் குற்றச்சாட்டையும் நிராகரித்து அதிலிருந்து தப்பித்துக் கொள்வது இந்த அர சுக்கு கைவந்த கலை. மூதூரில் 2008 ஓகஸ்டில் பிரெஞ்சு நாட்டின் பட்டினிக்கு எதிரான அமைப்பின் 17 பேரின் மரணங்கள் மறக்கப்பட்ட ஒன்றாகி விட்டது. அதேபோன்று, வன்னிப்பகுதியில் மனிதஉரிமைகளும் மறைக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் ஐ.நா. உறுதியாக நின்று செயற்படும் என்று தமிழ் மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

குற்றம் உள்ள நெஞ்சம் குறுகுறுக்கும் என்பது அழிக்கமுடியாத அல்லது மறக்கமுடியாத மந்திரம். இலங்கை அரசு வன்னிப் போரில் மனித உரிமைமீறல்களில் ஈடுபட வில்லை எனில், அது குறித்த விசாரணை என்றதும் அதற்கு ஒவ்வாமை (அலர்ஜி) ஏற்பட்டுப் பதறுவதும், தாம் சுத்தவாளிகள் என்று கூறுவதற்கு உலக நாடுகளின் ஆதரவை தேடுவதும் ஏன்?

உண்மை ஒரு போதும் அழியாது, என்றோ ஒரு நாள் அது வெளிக்கிளம்பும். தனது உருவத்தை காட்டும்.இது இயற்கையின் நியதி மட்டுமல்ல, அதன் நீதியுமாகும்.
இதனை உணர்ந்து கொள்ளும் மனப்பக்குவம் இலங்கை அரசினருக்கு எப்போது பிறக்கும்...? காலம் பதில் சொல்லாமலா விடும்?
நன்றி – உதயன் ♦

## வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பின் ஒரு பார்வை...தொடர்கின்றது

இப்பேரவையின் மூலம் பொருளாதார உதவிகளையும், அரசியல் அபிலாசைகளையும் எம் உறவுகளுக்கு செய்வது அதிக வலுவுள்ள பெறுபேற்றைத் தரும். அது மட்டுமல்லாமல் எமது உறவுகளுக்கு செய்யும் உதவிகளவர்களை சேர்வதை உறுதிபடுத்தவும், துரிதப்படுத்தவும், அதற்குரிய சட்டச் சிக்கல்களை எதிர் கொள்ளவும், பன்னாட்டு அரசுகளினதும், தொண்டு நிறுவனங்களினதும் உதவியை பெறல் போன்ற செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் முடியும். ஆகவே இந்த அமைப்பில் பெருமளவு இணைந்து எமது உறவுகளின் துயர் துடைக்க பலப்படுத்துமாறு அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை வேண்டி நிற்கின்றது.

அவுஸ்திரேலிய தமிழர் பேரவை புலம் பெயர்ந்து வாழ்கின்ற ஈழத்தமிழர்களாகிய உங்களிடம் வேண்டி நிற்பது காலத்தின் தேவையை உணர்ந்து விவேகமாக சிந்தித்து எமது அரசியல் நகர்வுகளை காலம் தாழ்த்தாது செயற்படுத்த வேண்டும் என்பதுதான். இந்த ரீதியில் இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பில் சித்திரை 17, 18 ஆம் திகதிகளில் சகலரும் தவறாது பங்குகொண்டு பூரண ஆதரவு தெரிவிப்பது எமது உரிமையும் கடமையுமாகும். புலம் மெயர் நாட்டில் எமது கொதி நிலை தளச்சியடையுமானால் அதன் பிரதிபலன் தாயகத்தில் பெரும் அவலநிலை தொடரும். ♦

## உண்மை வெளிப்படுவதை தடுக்கும் முயற்சி?... தொடர்ச்சி

யிடுவது என்பது மற்றொரு குற்றச்சாட்டு.

இந்த இரண்டையும் ஒன்றை மற்றொன்றால் மூடி விவகாரத்தை தமக்கு சாதகமாக்கித் தணித்துவிடலாம் என்று இலங்கை கருதுவதாக நோக்கர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

மேலும் இந்த விவகாரத்தில் பான் கீ மூனைத் தமது பக்கத்துக்கு இழுத்துவிடவும் இலங்கை ""பெருமுயற்சி" செய்து வருவதாகவும் தகவல்கள் கசிந்து வருகின்றன. இத்தனை ராஜதந்திரக் கூத்துகளும் ஏன்? உண் மைக்கு என்றும் அழிவில்லை. வன்னிப்பகுதியில் மனித உரிமை மீறல்களை அரசு மேற்கொள்ளவில்லை என்பது உண்மையானால், ஐ.நா செயலாளர் நாயகம் தமக்கென ஒரு நிபுணர்(ஆலோசனை) குழுவை நியமிப்பது குறித்து இலங்கை அரசு ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்? அச்ச முற வேண்டும்? அரசின் கை சுத்தமானது எனின் இலங்கை அரசே வெளிநாட்டு நிபுணர்குழு ஒன்றை நியமித்து, தனது பக்கத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வரலாமே?

தனக்கு எதிராக வரும் எந்தக் குற்றச்சாட்டையும் நிராகரித்து அதிலிருந்து தப்பித்துக் கொள்வது இந்த அர சுக்கு கைவந்த கலை. மூதூரில் 2008 ஓகஸ்டில் பிரெஞ்சு நாட்டின் பட்டினிக்கு எதிரான அமைப்பின் 17 பேரின் மரணங்கள் மறக்கப்பட்ட ஒன்றாகி விட்டது. அதேபோன்று, வன்னிப்பகுதியில் மனிதஉரிமைகளும் மறைக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் ஐ.நா. உறுதியாக நின்று செயற்படும் என்று தமிழ் மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

குற்றம் உள்ள நெஞ்சம் குறுகுறுக்கும் என்பது அழிக்கமுடியாத அல்லது மறக்கமுடியாத மந்திரம். இலங்கை அரசு வன்னிப் போரில் மனித உரிமைமீறல்களில் ஈடுபட வில்லை எனில், அது குறித்த விசாரணை என்றதும் அதற்கு ஒவ்வாமை (அலர்ஜி) ஏற்பட்டுப் பதறுவதும், தாம் சுத்தவாளிகள் என்று கூறுவதற்கு உலக நாடுகளின் ஆதரவை தேடுவதும் ஏன்?

உண்மை ஒரு போதும் அழியாது, என்றோ ஒரு நாள் அது வெளிக்கிளம்பும். தனது உருவத்தை காட்டும்.இது இயற்கையின் நியதி மட்டுமல்ல, அதன் நீதியுமாகும். இதனை உணர்ந்து கொள்ளும் மனப்பக்குவம் இலங்கை அரசினருக்கு எப்போது பிறக்கும்...? காலம் பதில் சொல்லாமலா விடும்?

நன்றி – உதயன் ♦

## வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பின் ஒரு பார்வை...தொடர்கின்றது

இப்பேரவையின் மூலம் பொருளாதார உதவிகளையும், அரசியல் அபிலாசைகளையும் எம் உறவுகளுக்கு செய்வது அதிக வலுவுள்ள பெறுபேற்றைத் தரும். அது மட்டுமல்லாமல் எமது உறவுகளுக்கு செய்யும் உதவிகளவர்களை சேர்வதை உறுதிபடுத்தவும், துரிதப்படுத்தவும், அதற்குரிய சட்டச் சிக்கல்களை எதிர் கொள்ளவும், பன்னாட்டு அரசுகளினதும், தொண்டு நிறுவனங்களினதும் உதவியை பெறல் போன்ற செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் முடியும். ஆகவே இந்த அமைப்பில் பெருமளவு இணைந்து எமது உறவுகளின் துயர் துடைக்க பலப்படுத்துமாறு அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை வேண்டி நிற்கின்றது.

அவுஸ்திரேலிய தமிழர் பேரவை புலம் பெயர்ந்து வாழ்கின்ற ஈழத்தமிழர்களாகிய உங்களிடம் வேண்டி நிற்பது காலத்தின் தேவையை உணர்ந்து விவேகமாக சிந்தித்து எமது அரசியல் நகர்வுகளை காலம் தாழ்த்தாது செயற்படுத்த வேண்டும் என்பதுதான். இந்த ரீதியில் இந்த வட்டுக்கோட்டை தீர்மானத்தின் மீதான மீள்வாக்கெடுப்பில் சித்திரை 17, 18 ஆம் திகதிகளில் சகலரும் தவறாது பங்குகொண்டு பூரண ஆதரவு தெரிவிப்பது எமது உரிமையும் கடமையுமாகும். புலம் மெயர் நாட்டில் எமது கொதி நிலை தளச்சியடையுமானால் அதன் பிரதிபலன் தாயகத்தில் பெரும் அவலநிலை தொடரும். ♦

## விழியுங்கள்! விழியுங்கள்! உங்கள் விழிகாக்க விழியுங்கள்!!

விழியுங்கள்! விழியுங்கள்!!
விழியுள்ளவராகவே! விழியுங்கள்!!!
நாடும் மொழியும் உங்கள்
இருவிழி என கருதியே.... விழியுங்கள்!

விழியா விழிகளாய் விழியிருந்தும் வாழாது
வேளை இதுவென கண்டுவிழியுங்கள்!!
இப்போ............விழியாதுபோனால்...........இனி.....
இருவிழியுண்டோ உங்களின் வாழ்வில்?

அழியும் இனமா நாங்கள்?-யாரும்எமை
அழிக்க அழிவதா நாங்கள்?-இனியும்
அதற்குத்துணையாவதா நாங்கள்?-இதற்கு
துணைபோபவரையும் ஏற்பதா நாங்கள்?

பழியும் குழியும் பாராது நடந்து
பைந்தமிழினத்தை பதவிக்காய் விற்று
இழிவைத்தேடிட இனத்துள் போட்டியிடும்
இவர்களா தமிழர்? எம்ஈழத்திழர்?

இறமையும் இழந்து குறவராய் வாழவா
எத்தனைபேர்கள் தேர்தல்களத்திலே?
மறவரின் உயிர்கள் மன்னிக்குமாஇவர்களை?-ஈழ
மண்தான் பொறுக்குமா இவர்களின் துரோகத்தை?

தமிழாயின் விழி! தமிழனாய்விழி!
தன்மானம் உண்டாயின் விழி!
தாய்மானம் உளம் கொண்டாயின் விழி!
தமிழ்வழி தினம் நடந்தாயின் விழி!-தமிழனென
தரணியில் தலைநிமிர்வாயின்............... விழி!விழி!!
இருவிழிகாக்க விழி!விழி!!

தம் வாழ்வுக்கு வழிதேடி உன்வீட்டுவாசல்தேடி
வாக்குத்தேடிவருவோர்க்கு -வகைகூற விழியுங்கள்!

பழியென்றும் பாராது -பகைவருமென்றும் பாராது
அழியென்று அழித்தவர்கள்........... அவர்களல்லவா?-
இன்று
இழிவென்ற நினைவுமின்றி பல்இழித்து வரும்போது
விழிகொண்டுநில்லுங்கள் தமிழின்வழிகண்டு
கொள்ளுங்கள்

விழியா விழிகளாய்! அழியா பழிசுமக்கும் விழிகளாய் வாழ
உங்கள் விழியென்ன விழியா? முகக்குழியா?
விழியா விழியாய் வழிமாறும் விழியாய்
தெளிவின்றி நீயிருந்தால்........உன்தேசம் பறிபோனபின்பு
எம்தளிர்கள் வாழ்வதெங்கே? உன்தரணியின் பெயர்தான்
என்னே?
மழுவனாய் வாழாது எருமைகுளுவனாய் திரியாது -பட்ட
பழுவினை மறவாது மனதை உழுதுவிதையுங்கள் -
மண்ணில்
உண்மையை விளையுங்கள்- உலகைவிழியுங்கள்
விழிகொண்டுவிழியுங்கள் இருவிழிகாக்க விழியுங்கள்

கவிவன் ♦

## முகாமில் இருந்து ஓர் முனகல்

முனகியவன் முத்தன்

முள்ளுக் கம்பிக்குள் இருந்து
முனங்குகின்றேன் -கேட்கிறதா?
கொள்ளை அடிக்கூட்டம் இங்கே
கொட்டம் அடிக்கின்றதே

வீடு இல்லை வாசல் இல்லை
வேட்டி இல்லை சேலை இல்லை
வெறுங்கையோடு நாமிங்கே
வெட்டியாக நிற்கின்றோம்

தமிழர் வீடுகள் தலைநகர் செல்கிறது
இடையிடையே கேள்விப்படும் செய்தி
இடியோசையாய் நெஞ்சம் கனக்கிறது
தென்பகுதிச் சந்தைகளில் வாகனமாய்

## முகாமில் இருந்து ஓர் முனகல்... தொடர்ச்சி

வாகன உதிரிகளாய் மோ.சைக்கில்களாய்
கதவுநிலைகளாய்; ஓடுகளாய்
கூரை மரங்களாய் இரும்புக்கேற்றாய்
வீடு உடைத்த கல்லாய் வீட்டுத்தளபாடமாய்
எல்லாமே மலிவாம் என்கிறார்கள்

ஊர் இழந்தோம் உறவுகளின் உயிர் இழந்தோம்
ஊனமுற்று நாமிருக்க பகற்கொள்ளை அடிக்கிறார்கள்
பக்குவமாய் எமை அடைத்துவிட்டு
வெளிநாட்டு உதவிகளை விளையாட்டாய் எடுத்திங்கே
வெற்றுத்தகரத்தில் வீடு கட்டு என்கிறார்கள்
சொந்த வீட்டில் இருந்து கொண்டு
சொந்த உரிமையைத்தான் நாம் கேட்டோம்

அடித்தாய் அறுபது மைலுக்கப்பால் துரத்தினாய்
அகதி முத்திரை குத்தினாய்
கிள்ளிப் போட்டு அள்ளித் தின்என்கிறாய்
மீள்குடியேற்றம் என்றாய A-9 திறந்தாய்
பஸ் விட்டாய் முடிந்ததா?

தமிழர்தம் பிரச்சனையும் தமிழர்க்கான தீர்வும்
உலக அரங்கில் பிரச்சனை ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்
உன்னால் ஏற்படுத்தப்பட்ட அடக்குமுறைகள்
தளர்தியவை சில தம்பட்டமோ பல
தயக்கமின்றி கேட்கிறாயே வாக்கு
அபிவிருத்தி என்று ஆசைகாட்டி மோசம் செய்ய
அதன் பின்னால் எடுபடலாம் சிலர்
அவர்கள்தான் புத்தி பேதலித்தவர்
சீற் இல்லை என்பதனால் சிதறுண்ட சிலருக்கு
கொள்கை ஒன்று உண்டோ? கொஞ்சம் சிந்தியுங்கள்

தமிழினத்தின் கட்சி தமிழர்தம் கூட்டமைப்பு
தவறாமல் பலம் சேர்த்து தமிழினத்தை காத்திடுவோம்
தக்க பாடத்தை தப்பாமல் கொடுப்பதற்கு
தயாராக நாமின்று தலைவனைத் தெரிந்திடுவோம்
கிளிநொச்சிக்கு ஒரு கிளிநொச்சியான் வேண்டும்
பாராளுமன்றத்தில் பயமின்றி கதைப்பதற்கு
படித்த பெடியனை பயணம் அனுப்பிடுவோம் ♦

## சோழியன் குடுமி...தொடர்ச்சி

வழமையாக ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்கு வருபவர் ஒவ்வொன்றும் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட இரண்டு பதவிக்காலத்துக்கு அதாவது பத்து வருடங்களுக்கு பதவியில் நீடிப்பது வழமை.
பான் கீ மூனுக்கு முன்னர் பதவியில் இருந்த கோபி அனான் (கானா), ஜாவீர் பேர்ஸி டி கியூலர் (பெரு), கூர்ட் வால்ட்ஹெய்ம் (ஆஸ்திரியா), ஊதாண்ட் (பர்மா), டாக் ஹமர்ஸ்க் யோல்ட் (சுவீடன்) போன்றோர் இரண்டு பதவிக் காலங்களை அலங்கரித்தார்கள்.
ஆனால் பூட்ரஸ் பூட்ரஸ் காலி (எகிப்து), டிரிஜ்வி லீ (நோர்வே) ஆகியோர் ஒரே ஒரு பதவிக் காலத்துக்கு மட்டும் பதவியில் இருந்தனர்.
பான் கீ மூனுக்கும் அடுத்த பதவிக் காலத்தையும் கைப்பற்றும் ஆசை வந்துவிட்டது. அதனால்தான் இலங்கை விடயத்தில் அவர் இத்தனை சீற்றம் காட்டுகின்றார் எனத் தோன்றுகின்றது.
இந்தப் பதவியில் அடுத்த தடவையும் அவர் தொடர்வதானால் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மேற்குலகின் ஆதரவுப் பின்புலம் அவருக்கு அவசியம். அது இல்லாமல், பதவியில் தொடரும் அவரது கனவு பலிக்காது.
சர்வதேச விவகாரங்கள் தொடர்பான சர்ச்சைகளில் மேற்குலகு எடுக்கும் நிலைப்பாட்டை வலிமையாக ஆதரிப்பதன் மூலம் மேற்குலகின் ஆதரவைத் தாம் தக்கவைத்து, அடுத்த தடவைக்கும் பதவிக்கு வரலாம் எனக் கணக்கிடு கின்றார் அவர்.
இலங்கை விடயத்தில் இலங்கை அரசுக்கு எதிராக மேற்குலகு சீறிக்கொண்டிருக்கின்றது. கிழக்கு நாடுகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி அதனை முறியடிப்பதில் மஹிந்தரின் ஆட்சி தீவிரமாக இருப்பதும் வெளிப்படை.
இந்தப் பின்னணியிலேயே மேற்குலகு இப்போது சீற்றமுடன் கையாளும் இலங்கை விகாரத்தைத் தமது கையில் எடுத்துக்கொண்டு துள்ளிக் குதிக்கிறார்
பான் கீ மூன். அவரின் குடுமி சும்மா ஆடவில்லை.......!

## நன்றி உதயன் ஆசிரியர் குழு ♦

## முகாமில் இருந்து ஓர் முனகல்... தொடர்ச்சி

வாகன உதிரிகளாய் மோ.சைக்கில்களாய்
கதவுநிலைகளாய்; ஓடுகளாய்
கூரை மரங்களாய் இரும்புக்கேற்றாய்
வீடு உடைத்த கல்லாய் வீட்டுத்தளபாடமாய்
எல்லாமே மலிவாம் என்கிறார்கள்

ஊர் இழந்தோம் உறவுகளின் உயிர் இழந்தோம்
ஊனமுற்று நாமிருக்க பகற்கொள்ளை அடிக்கிறார்கள்
பக்குவமாய் எமை அடைத்துவிட்டு
வெளிநாட்டு உதவிகளை விளையாட்டாய் எடுத்திங்கே
வெற்றுத்தகரத்தில் வீடு கட்டு என்கிறார்கள்
சொந்த வீட்டில் இருந்து கொண்டு
சொந்த உரிமையைத்தான் நாம் கேட்டோம்

அடித்தாய் அறுபது மைலுக்கப்பால் துரத்தினாய்
அகதி முத்திரை குத்தினாய்
கிள்ளிப் போட்டு அள்ளித் தின்என்கிறாய்
மீள்குடியேற்றம் என்றாய A-9 திறந்தாய்
பஸ் விட்டாய் முடிந்ததா?

தமிழர்தம் பிரச்சனையும் தமிழர்க்கான தீர்வும்
உலக அரங்கில் பிரச்சனை ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்
உன்னால் ஏற்படுத்தப்பட்ட அடக்குமுறைகள்
தளர்தியவை சில தம்பட்டமோ பல
தயக்கமின்றி கேட்கிறாயே வாக்கு
அபிவிருத்தி என்று ஆசைகாட்டி மோசம் செய்ய
அதன் பின்னால் எடுபடலாம் சிலர்
அவர்கள்தான் புத்தி பேதலித்தவர்
சீற் இல்லை என்பதனால் சிதறுண்ட சிலருக்கு
கொள்கை ஒன்று உண்டோ? கொஞ்சம் சிந்தியுங்கள்

தமிழினத்தின் கட்சி தமிழர்தம் கூட்டமைப்பு
தவறாமல் பலம் சேர்த்து தமிழினத்தை காத்திடுவோம்
தக்க பாடத்தை தப்பாமல் கொடுப்பதற்கு
தயாராக நாமின்று தலைவனைத் தெரிந்திடுவோம்
கிளிநொச்சிக்கு ஒரு கிளிநொச்சியான் வேண்டும்
பாராளுமன்றத்தில் பயமின்றி கதைப்பதற்கு
படித்த பெடியனை பயணம் அனுப்பிடுவோம் ♦

## சோழியன் குடுமி...தொடர்ச்சி

வழமையாக ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்கு வருப வர் ஒவ்வொன்றும் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட இரண்டு பதவிக்காலத்துக்கு அதாவது பத்து வருடங்களுக்கு பதவியில் நீடிப்பது வழமை.
பான் கீ மூனுக்கு முன்னர் பதவியில் இருந்த கோபி அனான் (கானா), ஜாவீர் பேர்ஸி டி கியூலர் (பெரு), கூர்ட் வால்ட்ஹெய்ம் (ஆஸ்திரியா), ஊதாண்ட் (பர்மா), டாக் ஹமர்ஸ்க் யோல்ட் (சுவீடன்) போன்றோர் இரண்டு பதவிக் காலங்களை அலங்கரித்தார்கள்.
ஆனால் பூட்ரஸ் பூட்ரஸ் காலி (எகிப்து), டிரிஜ்வி லீ (நோர்வே) ஆகியோர் ஒரே ஒரு பதவிக் காலத்துக்கு மட் டும் பதவியில் இருந்தனர்.
பான் கீ மூனுக்கும் அடுத்த பதவிக் காலத்தையும் கைப்பற்றும் ஆசை வந்துவிட்டது. அதனால்தான் இலங்கை விடயத்தில் அவர் இத்தனை சீற்றம் காட்டுகின்றார் எனத் தோன்றுகின்றது.
இந்தப் பதவியில் அடுத்த தடவையும் அவர் தொடர்வ தானால் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றி யம் போன்ற மேற்குலகின் ஆதரவுப் பின்புலம் அவருக்கு அவசியம். அது இல்லாமல், பதவியில் தொடரும் அவரது கனவு பலிக்காது.
சர்வதேச விவகாரங்கள் தொடர்பான சர்ச்சைகளில் மேற்குலகு எடுக்கும் நிலைப்பாட்டை வலிமையாக ஆத ரிப்பதன் மூலம் மேற்குலகின் ஆதரவைத் தாம் தக்கவைத்து, அடுத்த தடவைக்கும் பதவிக்கு வரலாம் எனக் கணக்கிடு கின்றார் அவர்.
இலங்கை விடயத்தில் இலங்கை அரசுக்கு எதிராக மேற் குலகு சீறிக்கொண்டிருக்கின்றது. கிழக்கு நாடுகளின் செல் வாக்கைப் பயன்படுத்தி அதனை முறியடிப்பதில் மஹிந்த ரின் ஆட்சி தீவிரமாக இருப்பதும் வெளிப்படை.
இந்தப் பின்னணியிலேயே மேற்குலகு இப்போது சீற்ற முடன் கையாளும் இலங்கை விகாரத்தைத் தமது கையில் எடுத்துக்கொண்டு துள்ளிக் குதிக்கிறார்
பான் கீ மூன். அவரின் குடுமி சும்மா ஆடவில்லை.......!

## நன்றி உதயன் ஆசிரியர் குழு ♦

# முள்ளிவாய்காலுக்குப் பின்னான சிறீலங்காவின் இரகசிய தடுப்பு முகாம்கள்

**வடகிழக்கு மனித உரிமைக் செயலகத்தின் (NESoHR) வேண்டுதல்**

முள்ளிவாய்கால் நிகழ்வைத் தொடர்ந்து, பல்லாயிரக்கணக்கான முன்னாள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு ஒரு வருடகாலமாகப் போகின்றது. ஒட்டு மொத்தமாக எவ்வளவு முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பற்றி சிறீலங்கா அரசின் அறிக்கைகளைத் தவிர வேறு எவ்விதமான தகவல்களும் வெளிவரவில்லை. தடுத்து வைக்கப்பட்டிருப்போரை சந்திப்பதற்கு ஐசிஆர்சி அனுமதிக்கப்பட்ட காலத்தில் ஐசிஆர்சி வெளியிட்ட அறிக்கையொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருபோரில் 6700 பேரை தாம் நேர்கண்டதாக குறிப்பட்டிருந்தார்கள். http://www.icrc.org/Web/Eng/siteeng0.nsf/html/sri-lanka-update-090609. ஆகையால் இவர்கள் பெயர்கள் ஐசிஆர்சியடம் உள்ளது என்று அனுமானிக்கலாம். இம்முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடும்பத் தொடர்பை பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். மனித உரிமைக் கண்காணிப்பகம் அண்மையில் அவ்வகையாகத் தடுத்து வைக்கப்பட்டிலுப்போரைப் பற்றி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

அதேநேரத்தில், 2000க்கும் மேற்பட்டோர் முள்ளிவாய்க்காலிலிருந்து வெளியேறி சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு இரகசிய தடை முகாம்களில் எதுவித வெளியுலக தொடர்புமற்று உள்ளனர். தற்சமயம் இவர்கள் ஐசிஆர்சியின் காணாமல் போனோர் பட்டியலிலேயே உள்ளனர். இவர்கள் காணாமல் போனோராக கணிக்கப்படுவதற்கு அவர்கள் முள்ளிவாய்க்காலிலிருந்து வெளியேறியதையும், சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டதையும் உறுதிப்படுத்தாமல் இருப்பதே காரணமாகும். சாட்சிகள் மூலம் இதை உறுதிப்படுத்தாவிட்டால், அவர்கள் முள்ளிவாய்கால் போரின் போது கொல்லப்பட்டு விட்டார்கள் என்று தட்டிக் கழிப்பது சுலபமாகிவிடும். அவர்களின் நிலைமை ஆபத்தானது. இதிலும் முக்கியமாக பெண்களின் நிலைமையை வெளிக் கொண்டுவர வேண்டிய தேவை உள்ளது. இவர்கள் நிலை பற்றி மிக மோசமான பல செய்திகள் கசிந்து வெளி வந்துகொண்டிருக்கின்றது.

குடும்பத் தொடர்பற்று இரகசியமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போராளிகளைப் பற்றிய தரவுகளை சேகரித்து அதுபற்றிய புள்ளிவிபரங்களை வெளியிடுவது அவர்களின் பாதுகாப்பை ஓரளவேனும் உறுதிப்படுத்தும் என்பதால் இத்தரவுகளை சேகரிக்கும் முயற்சியை வடகிழக்கு மனித உரிமைச்செயலகம் ஆரம்பித்துள்ளது. உங்கள் உறவுகள், அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இவ்வகையாகக் காணாமறப்போயிருந்தால் அவர்கள் பற்றிய கீழ்குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்டிருக்கும் மின்னஞ்சலுக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
தாயகத்தில் உள்ளவர்கள் நேரடியாக மின்னஞ்சல் செய்ய அஞ்சின், அவ்விபரங்களை வெளிநாடுகளிலுள்ள உங்கள் உறவுகள் வாயிலாகவும் அனுப்பி வைக்கலாம். அத்துடன் புலம்பெயர் வாழ் தமிழ்மக்கள் உங்களுக்குத் தெரிந்த, தாயகத்தின்வாழும் மின்னஞ்சல் வசதியற்ற உறவுகளிடமிருந்தும் விபரங்களைப் பெற்று எமக்கு அனுப்பிவைக்கலாம். விபரம் தருபவர்களின் பெயர், விபரங்கள் வெளியிடப்படமாட்டா.
வேண்டப்படும் விபரங்கள்:

காணாமல் போனவரின் முழுப் பெயர்:-

பிறந்த திகதி:-

சிறீலங்கா இராணுவம் கைது செய்ததை அல்லது இராணுவத்திடம் சரணடைந்ததை யாரும் கண்டார்களா?
மின்னஞ்சல் மூலம் விபரம் தருபவர் பெயர்:
காணாமல் போனவருக்கு உறவுமுறை:
அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி:

nesohrsrilanka@gmail.com

**வடகிழக்கு மனித உரிமைச் செயலகம் பற்றி**

www.nesohr.org

வடகிழக்கு மனித உரிமைச் செயலகம் 2004ம் ஆண்டு சமாதான நடவடிக்கையின் ஒரு அங்கமாக சிறீலங்கா இராணுவத்தால் 2008இல் கொல்லப்பட்ட அருட்திரு கருணரட்னம் அடிகளாரின் தலைமையில் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டது. ஜனவரி 2009 வரை வன்னியில் இயங்கி பின் அங்கு செயலிழந்தது. மெனிக்பாம் முகாம்களிலிருந்தும் இதற்கு முன்பேயும் வெளிநாடுகளுக்கு வந்து சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் சேர்ந்து இந்த செயற்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். ♦

# Australian Tamil Referendum

## Referendum on Independent & Sovereign Tamil Eelam



## 17th and 18th April 2010

### Polling Booths:

**NEW SOUTH WALES**
- Epping
- Homebush
- Mt Druitt
- Wentworthville

**VICTORIA**
- Dandenong (South)
- Delahey(West)
- Reservoir(North)
- Vermont South (East)

**CANBERRA (ACT)**
- Isaac

* All booths are open from 8am to 6pm on 17th and 18th April 2010.
Postal voting is the only method of voting for QLD, SA, WA, NT and TAS

## World is listening...what do you want to say?

## Please register as soon as possible...

A public meeting will be held at Homebush Boys High School on Monday, 5th of April featuring several prominent Tamil speakers

Please call 1300 464 402 or email at info@vkr1976.com.au for more informa

www.vkr1976.com.au

# Australian Tamil Referendum

## Referendum on Independent & Sovereign Tamil Eelam



## 17th and 18th April 2010

### Polling Booths:

**NEW SOUTH WALES**
- Epping
- Homebush
- Mt Druitt
- Wentworthville

**VICTORIA**
- Dandenong (South)
- Delahey(West)
- Reservoir(North)
- Vermont South (East)

**CANBERRA (ACT)**
- Isaac

* All booths are open from 8am to 6pm on 17th and 18th April 2010.
Postal voting is the only method of voting for QLD, SA, WA, NT and TAS

**World is listening...what do you want to say?**

**Please register as soon as possible...**

A public meeting will be held at Homebush Boys High School on Monday, 5th of April featuring several prominent Tamil speakers

Please call 1300 464 402 or email at info@vkr1976.com.au for more information

www.vkr1976.com.au

on

# அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை



*Postal Address:*
*P.O. BOX 22 COMO WA 6952 AUSTRALIA*
*Tel: 1300 660 629*
*Web: http://www.australiantamilcongress.com*

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் ஒரு பகுதியினரே அரசியலில் ஆர்வம் காட்டிவந்திருக்கின்றார்கள். அவர்களும் தனித்தனியாகவே செயற்பட்டு வந்துள்ளார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களின் முயற்சிகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. இதுவரை காலமும் அமைதியாக இருந்த மக்களையும், இளஞ்சந்ததியினரையும் அரசியலில் ஈடுபட வைத்து எமது தமிழ்ச் சமூகத்தின் ஒருங்கிணைந்த நோக்கத்தை உலகுக்கு எடுத்துக் காட்டுவது எமது கடமை.

அவுஸ்திரேலிய தமிழ் பேரவை பல அரசியல் வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது, எமது அமைப்பினரின் நோக்கம் நிறைவேறுவதற்க்கு எமது பேரவையின் அங்கத்துவர்களின் எண்ணிக்கையும், பொருள் பலமும் முக்கியமானது என்பது மறுக்கவோ, மறைக்கமுடியாத உண்மை. அதனால் உங்கள் ஒவ்வொருவரையும் எமது பேரவையில் இணைந்து எம்மைப் பலப்படுத்தும்படி வேண்டி நிற்கின்றோம். எமது பேரவையின் எதிர்காலத்தை வழி நடத்தும் பொறுப்பு ஒவ்வொரு அங்கத்தவர்களின் கைகளிலும் உள்ளது.

உங்களது உதவி சிறியதாகவோ பெரியதாகவோ இருப்பினும் எமது நீண்ட கால, இடைத்தர கால, குறுகிய கால குறிக்கோள்களை அடைவதற்கு மிக முக்கியமானது.

நீதிக்காகவும் அமைதிக்காகவும் நாம் தொடங்கிய பயணத்தில் உங்களையும் உங்களது நண்பர்களையும் உறவினர்களையும் இணைத்துக் கொள்ளும்படி தாழ்மையுடன் வேண்டி நிற்கின்றோம்.

எமது தேசிய சஞ்சிகைக்கான கட்டுரைகள் செய்திகளை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்

newsletter@australiantamilcongress.com

## அவுஸ்திரேலியத் தமிழர் பேரவை:
## சமாதானத்தையும் நீதியையும் நோக்கிய அறப்போர்

**எம் கொள்கை**

“மக்களால் மக்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட மக்களின் பேரவையே அவுஸ்திரேலியத் தமிழ் பேரவையாகும். எமது கொள்கையானது நீதியையும் சமாதானத்தையும் அடிப்படையாக வைத்து எமது மக்களின் வளமான, சுதந்திரமான, சமத்துவமான, பாதுகாப்பான அமைதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எமது மக்களின் ஒருங்கிணைந்த குரலாக ஒலிப்பதுவாகும்.”

**எம் இலட்சியம்**

“அவுஸ்திரேலியத் தமிழ் பேரவை அவுஸ்திரேலிய சமூகத்தில் அங்கம் வகிக்கும் தமிழர்களின் ஆக்க பூர்வமான பங்களிப்பை ஊக்குவிப்பதாகவும், தமிழர்களுக்கு முக்கியானற்றை வெளிக் கொணர்வதாகவும், அவுஸ்திரேலியப் பண்புகளை நிலைநிறுத்துவதாவும், மற்றைய சமூகங்கள், அரசுகள், அமைப்புக்கள் அனைத்தையும் தமிழர்களின் சமூக, பண்பாட்டு, அரசியல் அக்கறைகள், கவலைகளில் ஈடுபடுத்துவதாகவும் அமைவதே எம் இலட்சியம்.”

**எம் குறிக்கோள்**

“எமது குறிக்கோளானது உலகளாவிய ரீதியில் தமிழ் மக்களின் மனித உரிமைகளுக்காகக ஒருங்கிணைந்த குரல் கொடுப்பது, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றிய அறிவியலை மக்களிடையே ஏற்படுத்துவது, எமது மக்களின் பாதுகாப்பிற்கும், வளமையான வாழ்விற்கும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது, எமது எதிர்கால சந்ததியினரிற்கு எமது நாட்டில் நடந்த இனப்படுகொலையைப் பற்றி எடுத்துக்கூறுவது என்பவையாகும்.”

ATC
AUSTRALIAN TAMIL CONGRESS